புத்தாவின்’

## தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

# பொது அறிவு

## அலகு III & IV

### இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் இந்திய தேசிய இயக்கம்

### &

### இந்திய ஆட்சியியல்

தொகுப்பு

ம. விஜயகுமார்

புத்தா பதிப்பகம் (பி) லிட்.,
எண் : 103, செயின்ட் மேரிஸ் சாலை,
அபிராமபுரம், மந்தைவெளி, சென்னை - 600018.
04446885835 / 9498553216 / 8148563886
மின்னஞ்சல் : buddhapublication.r@gmail.com

நூல் : TNPSC - பொது அறிவு (அலகு III & IV)

தொகுப்பு : ம. விஜயகுமார்

பதிப்பு : 2026

வெளியீடு : புத்தா பதிப்பகம் (பி) லிட்.,
எண் : 103, செயின்ட் மேரிஸ் சாலை,
அபிராமபுரம், மந்தைவெளி, சென்னை - 600018.
மின்னஞ்சல் : buddhapublication.r@gmail.com
04446885835 / 9498553216 / 8148563886



உரிமை : © புத்தா பதிப்பகம் (பி) லிட்.



விலை : ரூ. 650



* இந்நூலின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுவெளியீடு செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ கூடாது.

# உள்ளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| | **அலகு III** | |
| | **இந்தியாவின் வரலாறு, பண்பாடு மற்றும் இந்திய தேசிய இயக்கம்** | |
| 1) | சிந்து சமவெளி நாகரிகம் | 1 - 22 |
| 2) | குப்தர்கள் | 23 - 44 |
| 3) | தில்லி சுல்தான்கள் | 45 - 66 |
| 4) | முகலாயர்கள் | 67 - 98 |
| 5) | மராத்தியர்கள் | 99 - 118 |
| 6) | விஜயநகர மற்றும் பாமினி அரசுகளின் காலம் | 119 - 144 |
| 7) | தென் இந்திய வரலாறு | 145 - 236 |
| 8) | தேசிய மறுமலர்ச்சி | 237 - 264 |
| 9) | ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான தொடக்ககால எழுச்சிகள் | 265 - 286 |
| 10) | இந்திய தேசிய காங்கிரசு | 287 - 292 |
| 11) | பி.ஆர்.அம்பேத்கர் | 293 - 296 |
| 12) | பகத்சிங் | 297 - 298 |
| 13) | பாரதியார் | 299 - 302 |
| 14) | வ.உ.சிதம்பரனார் | 303 - 306 |
| 15) | தந்தை பெரியார் | 307 - 314 |
| 16) | ஜவஹர்லால் நேரு | 315 - 320 |
| 17) | ரவீந்திரநாத் தாகூர் | 321 - 326 |
| 18) | காமராசர் | 327 - 332 |
| 19) | மகாத்மா காந்தி | 333 - 342 |
| 20) | மௌலானா அபுல் கலாம் ஆசாத் | 343 - 346 |

| | | |
|---|---|---|
| 21) | இராஜாஜி | 347 - 350 |
| 22) | சுபாஷ் சந்திர போஸ் | 351 - 354 |
| 23) | முத்துலெட்சுமி அம்மையார் | 355 - 358 |
| 24) | மூவலூர் இராமாமிர்தம் | 359 - 362 |
| 25) | விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு முறைகள் மற்றும் இயக்கங்கள் | 363 - 420 |
| 26) | வகுப்புவாதம் மற்றும் தேசப்பிரிவினை | 421 - 432 |
| 27) | இந்தியப் பண்பாட்டின் இயல்புகள் | 433 - 440 |
| 28) | வேற்றுமையில் ஒற்றுமை | 441 - 452 |
| 29) | இனம், மொழி, வழக்காறு | 453 - 458 |
| 30) | இந்தியா ஒரு மதச்சார்பற்ற நாடு | 459 - 462 |
| 31) | தேசிய சின்னங்கள் | 463 - 468 |


## அலகு IV
## இந்திய ஆட்சியியல்


| | | |
|---|---|---|
| 1) | இந்திய அரசியலமைப்பு | 469 - 478 |
| 2) | அரசியலமைப்பின் முகவுரை | 479 - 492 |
| 3) | அரசியலமைப்பின் முக்கிய கூறுகள் | 493 - 496 |
| 4) | ஒன்றியம், மாநிலம் மற்றும் யூனியன் பிரதேசங்கள் | 497 - 500 |
| 5) | குடியுரிமை | 501 - 506 |
| 6) | அடிப்படை உரிமைகள் | 507 - 510 |
| 7) | அடிப்படைக் கடமைகள் | 511 - 516 |
| 8) | அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் | 517 - 518 |
| 9) | ஒன்றிய நிர்வாகம் | 519 - 532 |
| 10) | ஒன்றிய நாடாளுமன்றம் | 533 - 552 |
| 11) | மாநில நிர்வாகம் | 553 - 562 |
| 12) | மாநில சட்டமன்றம் | 563 - 570 |

| | | |
|---|---|---|
| 13) | உள்ளாட்சி அமைப்புகள், பஞ்சாயத்து ராஜ் | 571 - 592 |
| 14) | கூட்டாட்சியின் அடிப்படைத் தன்மைகள் | 593 - 608 |
| 15) | மத்திய - மாநில உறவுகள் | 609 - 612 |
| 16) | தேர்தல் | 613 - 630 |
| 17) | இந்திய நீதி அமைப்புகள் | 631 - 652 |
| 18) | சட்டத்தின் ஆட்சி | 653 - 654 |
| 19) | பொதுவாழ்வில் ஊழல் - ஊழல் தடுப்பு நடவடிக்கைகள் | 655 - 658 |
| 20) | லோக்பால் மற்றும் லோக் ஆயுக்தா | 659 - 660 |
| 21) | தகவல் உரிமை | 661 - 664 |
| 22) | பெண்களுக்கு அதிகாரமளித்தல் | 665 - 676 |
| 23) | நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகள் | 677 - 700 |
| 24) | மனித உரிமைகள் சாசனம் | 701 - 714 |
| 25) | இந்தியாவில் அரசியல் கட்சிகளும் மற்றும் ஆட்சியல் முறைகளும் | 715 - 728 |
| | பிற்சேர்க்கை | 729 - 738 |

# 1. சிந்து சமவெளி நாகரிகம்

## சிந்துவெளி நாகரிகம்

6 ஆம் வகுப்பு - சமூக அறிவியல்

தொடக்கத்தில் மனிதர்கள் குழுக்களாக வாழ்ந்தார்கள். அக்குழுக்களில் இருந்து சமுதாயங்கள் உருவாகின. பின் அவை சமூகங்களாக வளர்ந்து காலப்போக்கில் நாகரிகங்களாயின.

**நாகரிகம்** என்ற சொல் பண்டைய **இலத்தீன்** மொழிச் சொல்லான **'சிவிஸ்'** (civis) என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள் **'நகரம்'** ஆகும்.

**மக்கள் ஏன் நதிக்கரையில் குடியேறினர்?**

மனிதர்கள் தங்கள் குடியேற்றங்களாக நதிக்கரைகளைக் கீழ்க்கண்ட காரணங்களுக்காகத் தேர்ந்தெடுத்தார்கள்.

- வளமான மண்
- ஆறுகளில் பாயும் நன்னீர் குடிப்பதற்கும் கால்நடைகளின் தேவைகளுக்கும், நீர்பாசனத்திற்கும் பயன்பட்டன.
- போக்குவரத்துக்கு ஏற்ற வழிகளாக இருந்தன.

| காலக்கோடு<br>உலகின் தொன்மையான நாகரிகங்கள் | |
|---|---|
| மெசபடோமியா நாகரிகம் | பொ.ஆ.மு. 3500 - 2000 |
| சிந்துவெளி நாகரிகம் | பொ.ஆ.மு. 3300 - 1900 |
| எகிப்து நாகரிகம் | பொ.ஆ.மு. 3100 - 1100 |
| சீன நாகரிகம் | பொ.ஆ.மு. 1700 - 1122 |

**ஹரப்பா - புதையுண்ட நகரம்**

ஹரப்பா நகரத்தின் இடிபாடுகளை முதன்முதலில் **சார்லஸ் மேசன்** என்ற ஆங்கிலேயர் தமது நூலில் விவரித்தார். அவர் கிழக்கிந்தியக் கம்பெனியில் பணிபுரிந்த படைவீரரும், ஆராய்ச்சியாளரும் ஆவார். அவர் தற்போது பாகிஸ்தானில் உள்ள இந்தியாவின் வடமேற்கு பகுதியைப் பார்வையிட்டபோது சில செங்கல் திட்டுகள் இருப்பதைக் கண்டார்.

"அந்தப் பாழடைந்த செங்கற்கோட்டை உயரமான சுவர்களுடனும், கோபுரங்களுடனும் ஒரு மலை மீது கட்டப்பட்டுள்ளது" எனக் குறிப்பிட்டார். இதுதான் ஹரப்பா இருந்ததற்கான முதல் வரலாற்றுச் சான்று ஆகும்.

கி.பி. (பொ.ஆ.) 1856-ல் பொறியாளர்கள் லாகூரில் இருந்து கராச்சிக்கு இரயில் பாதை அமைக்கும் பொருட்டு நிலத்தைத் தோண்டிய பொழுது அதிகமான சுட்ட செங்கற்கள் கண்டறியப்பட்டன. அவர்கள் அவற்றின் முக்கியத்துவத்தை உணராமல் அவற்றை இரயில் பாதைக்கு இடையில் போடப்படும் கற்களுக்குப் பதிலாகப் பயன்படுத்தினர்.

கி.பி. (பொ.ஆ.) 1920 இல் தொல்பொருள் ஆய்வாளர்கள் **ஹரப்பா** மற்றும் **மொஹஞ்சதாரோ** நகரங்களை அகழாய்வு செய்ய ஆரம்பித்தனர். அப்பொழுது நீண்டநாள் மறைந்து கிடந்த நகரத்தின் எஞ்சிய பகுதிகளை உலகின் பார்வைக்குக் கொண்டு வந்தார்கள்.

1924-இல் **இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையின் இயக்குநர் ஜான் மார்ஷல்** ஹரப்பாவிற்கும், மொகஞ்சதாரோவிற்கும் இடையே பொதுவான அம்சங்கள் இருப்பதைக் கண்டறிந்தார். அவை இரண்டுமே ஒரு பெரிய நாகரிகத்தைச் சார்ந்த வெவ்வேறு பகுதிகள் என்ற முடிவுக்கு வந்தார்.

ஹரப்பாவிலும் மொகஞ்சதாரோவிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மட்பாண்டங்களுக்கு இடையே சிறிய அளவு வேறுபாடு இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர். எனவே, ஹரப்பா நாகரிகம் மொகஞ்சதாரோவை விட பழமையானது என முடிவுக்கு வருகின்றனர்.

**இந்திய தொல்லியல் துறை ASI**

1861 ஆம் ஆண்டு அலெக்சாண்டர் கன்னிங்ஹாம் என்ற நில அளவையாளர் உதவியுடன் நிறுவப்பட்டது. இதன் தலைமையகம் புதுதில்லியில் உள்ளது.

தொல்லியலாளர்கள் எவ்வாறு புதையுண்ட நகரத்தைக் கண்டுபிடிக்கிறார்கள்?

- அகழ்வாராய்ச்சியாளர்கள் செங்கற்கள், கற்கள், உடைந்த பானை ஓடுகள் போன்றவற்றை ஆராய்ந்து அவை பயன்படுத்தப்பட்ட காலத்தை அறிந்து கொள்கிறார்கள்.
- பண்டைய இலக்கிய ஆதாரங்களைப் பயன்படுத்துகின்றனர்.
- வான்வழிப் புகைப்படங்கள் மூலம் புதையுண்ட நகரங்கள் மற்றும் இடங்களின் மேற்பரப்பைக் கண்டறிந்து கொள்கிறார்கள்.
- நிலத்தடியை ஆய்வு செய்ய காந்தப்புல வருடியை பயன்படுத்துகின்றனர்.

- எஞ்சிய தொல்பொருள்கள் புதையுண்டு இருக்கின்றனவா இல்லையா என்பதை ரேடார் கருவி மூலம் அறிய முடியும் (தொலை நுண்ணுணர்வு முறை)

**கால வரையறை**

| | |
|---|---|
| புவி எல்லை | தெற்கு ஆசியா |
| காலப்பகுதி | வெண்கலக்காலம் (மக்கள் வெண்கலத்தாலான பொருட்களைப் பயன்படுத்திய காலம்) |
| காலம் | பொ.ஆ.மு. (கி.மு.) 3300 - 1900 (கதிரியக்க கார்பன் வயதுக் கணிப்பு முறை மூலம் முடிவு செய்யப்பட்டது.) |
| பரப்பு | 13 லட்சம் சதுர கி.மீ. |
| நகரங்கள் | 6 பெரிய நகரங்கள் |
| கிராமங்கள் | 200 க்கும் மேற்பட்டவை |

**சிந்துவெளி நாகரிகத்தின் பரப்பளவு**

| | |
|---|---|
| மேற்கு | பலுசிஸ்தானின் மக்ரான் கடற்கரை வரை |
| கிழக்கு | காகர் - ஹாக்ரா நதிப் பள்ளத்தாக்கு வரை |
| வடகிழக்கு | ஆப்கானிஸ்தான் |
| தெற்கு | மகாராஷ்டிரா வரை |

**நகர நாகரிகம்**

ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் எனலாம். அதற்கான காரணங்கள் :

- சிறப்பான நகரத் திட்டமிடல்
- சிறப்பான கட்டிடக்கலை வேலைப்பாடு
- தூய்மைக்கும், பொது சுகாதாரத்திற்கும் கொடுக்கப்பட்ட அதிக முன்னுரிமை
- தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவீடுகள்
- விவசாய மற்றும் கைவினைத் தொழில்களுக்கான திடமான அடித்தளம்

**ஹரப்பா நாகரிகத்தின் தனித்தன்மை**

சிந்துவெளி நாகரிகத்தின் சிறப்பம்சமே திட்டமிட்ட நகர அமைப்பு ஆகும். நகரம் திட்டமிடப்பட்ட இரண்டு பகுதிகளாக இருந்தது.

மேல்நகர அமைப்பு

- நகரத்தின் மேற்கு பகுதி சற்று உயரமானது. அது கோட்டை எனப்பட்டது.
- நகர நிர்வாகிகள் இதைப் பயன்படுத்தினர்.
- பெருங்குளமும் தானியக் களஞ்சியங்களும் இருந்தன.

கீழ்நகர அமைப்பு

- நகரத்தின் கிழக்குப் பகுதி சற்று தாழ்ந்த உயரமுடையது. அதிகப் பரப்பு கொண்டது.
- அது பொதுமக்கள் வசிக்கும் இடமாக இருந்தது.

**மெஹர்கர் - சிந்துவெளி நாகரிகத்துக்கு முன்னோடி**

மெஹர்கர் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த ஓர் இடம் ஆகும். இது பாகிஸ்தான் நாட்டில் பலுசிஸ்தான் மாநிலத்தில் போலன் ஆற்றுப் பள்ளத்தாக்கில் அமைந்துள்ளது. இது தொடக்க கால மனிதர்கள் வாழ்ந்ததாகக் கண்டறியப்பட்ட இடங்களுள் ஒன்று. மக்கள் வேளாண்மையிலும், கால்நடை வளர்ப்பிலும் ஈடுபட்டதற்கான சான்று இங்கு கிடைத்துள்ளது. கி.மு. பொ.ஆ.மு.7000-ஐ ஒட்டிய காலத்திலேயே மெஹெர்கரில் நாகரித்துக்கு முந்தைய வாழ்க்கை நிலவியதற்கான தொல்லியல் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**தெருக்களும் வீடுகளும்**

- தெருக்கள் சட்டக வடிவமைப்பைக் கொண்டிருந்தன.
- தெருக்கள் நேராக அமைக்கப்பட்டிருந்தன. அவை வடக்கு தெற்காகவும், கிழக்கு மேற்காகவும் சென்றன. ஒன்றை ஒன்று செங்கோணத்தில் வெட்டிக்கொள்ளும் படியும் இருந்தன.
- சாலைகள் அகலமாகவும், வளைவான முனைகளைக் கொண்டதாகவும் இருந்தன.
- வீடுகள், தெருக்களின் இரு ஓரங்களிலும் சீராக அமைக்கப்பட்டிருந்தன.
- வீடுகள் ஒன்று அல்லது இரண்டு மாடி அடுக்குகளை உடையனவாகக் காணப்படுகின்றன.
- பெரும்பாலான வீடுகள் பல அறைகளையும் ஒரு முற்றத்தையும், ஒரு கிணற்றையும் கொண்டிருந்தன.
- ஒவ்வொரு வீட்டிலும் கழிவறையும், குளியலறையும் இருந்திருக்கின்றன.
- வீடுகள் சுட்ட செங்கற்களாலும் சுண்ணாம்புக் கலவையாலும் கட்டப்பட்டிருந்தன. சூரிய வெப்பத்தில் உலர வைக்கப்பட்ட செங்கற்களும் பயன்படுத்தப்பட்டன.
- பெரும்பாலான செங்கற்கள் சீரான அளவுகள் உடையதாகவே இருந்தன. கூரைகள் சமதளமாக இருந்தன.
- அரண்மனைகளோ, வழிபாட்டுத் தலங்களோ இருந்ததைத் தீர்மானிக்கக் கூடிய ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

**கட்டடங்கள் கட்டுவதற்கு ஏன் சுட்ட செங்கற்கள் பயன்படுத்தப்படுகின்றன?**

ஏனென்றால் அவை வலுவானவை, கடினமானவை, நிலைத்து நிற்கக் கூடியவை, நெருப்பைக் கூட தாங்குபவை. மேலும், அவை நீரினால் கரைவதில்லை.

**கழிவுநீர் அமைப்பு**

- ஏறத்தாழ எல்லா நகரங்களிலும் மூடப்பட்ட கழிவு நீர் வடிகால் அமைப்பு இருந்தது. வடிகால்கள் செங்கற்களைக் கொண்டும் கல்தட்டைகளைக் கொண்டும் மூடப்பட்டிருந்தன.

- வடிகால் கழிவு நீர் தேங்காமல் செல்ல வசதியாக லேசான மென்சரிவைக் கொண்டிருந்தது.
- கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்கான துளைகளும் சரியான இடைவெளியில் அமைக்கப்பட்டிருந்தன.
- வீட்டிலிருந்து கழிவுநீர் பல தெருக்களின் கீழ் அமைக்கப்பட்டிருந்த குழாய்கள் மூலமாக முக்கிய வடிகால்களைச் சென்றடையுமாறு அமைக்கப்பட்டிருந்தது.
- ஒவ்வொரு வீட்டிலும் திடக் கழிவுகளைத் தேக்குவதற்கான குழிகள் இருந்தன. அவை திடக்கழிவுகளைத் தேக்கி, கழிவு நீரை மட்டும் வெளியேற்றின.

**பெருங்குளம் - மொகஞ்சதாரோ**

- இந்த பெருங்குளமானது நன்கு அகன்று, செவ்வக வடிவத்தில் அமைந்திருந்த நீர்த்தேக்கம் ஆகும். இது நகரின் நடுவில் அமைக்கப்பட்டுள்ளது.
- நீர் கசியாத கட்டுமானத்துக்கான மிகப் பழமையான சான்று எனலாம்.
- இக்குளத்தின் சுவர்கள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டு, நீர் கசியாமல் இருப்பதற்காக சுவரிலும், தளத்திலும் பல அடுக்குகள் இயற்கைத் தார் கொண்டு பூசப்பட்டிருந்தன.
- வடபுறத்திலிருந்தும், தென்புறத்திலிருந்தும் குளத்திற்குச் செல்ல படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன. குளத்தின் பக்கவாட்டில் மூன்று புறமும் அறைகள் உள்ளன.
- அருகில் இருந்த கிணற்றில் இருந்து நீர் இறைக்கப்பட்டு பெருங்குளத்தில் விடப்பட்டது. உபயோகப்படுத்தப்பட்ட நீர் வெளியேறவும் வகை செய்யப்பட்டிருந்தது.

மொகஞ்சதாரோவில் காணப்படுகின்ற பெருங்குளமே உலகின் முதன் முதலில் கட்டப்பட்ட பொதுக்குளம் ஆகும்.

**தானியக் களஞ்சியம் - ஹரப்பா**

- தானியக் களஞ்சியம் - செங்கற்களால் அடித்தளமிடப்பட்ட, பெரிய, உறுதியான கட்டட அமைப்பு.
- இவை தானியங்களைச் சேகரித்து வைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டன.
- தள வெடிப்புகளில் கோதுமை, பார்லி, தினைவகைகள், எள் மற்றும் பருப்பு வகைகளின் மிச்சங்கள் சிதறிக் காணப்பட்டன.

செங்கற்களால் கட்டப்பட்ட சுவர்களைக் கொண்ட **தானியக் களஞ்சியம்** ஒன்று ஹரியானா மாநிலத்தில் உள்ள **ராகிகர்கி**யில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது முதிர்ச்சியடைந்த ஹரப்பா காலத்தைச் சேர்ந்தது.

**மாபெரும் கட்டடங்கள்**

- மொகஞ்சதாரோவில் இருந்த இன்னொரு மிகப்பெரும் பொதுக்கட்டடம், கூட்ட அரங்கு ஆகும்.
- இது 20 தூண்கள் 4 வரிசைகளைக் கொண்டு பரந்து விரிந்த கூடம் ஆகும்.

**வணிகம் மற்றும் போக்குவரத்து**

- ஹரப்பா மக்கள் பெரும் வணிகர்களாக இருந்தனர்.
- தரப்படுத்தப்பட்ட எடைகள் மற்றும் அளவைகள் அவர்களால் பயன்படுத்தப்பட்டன.
- பொருட்களின் நீளத்தை அளவிட, அளவுகள் குறிக்கப்பட்ட குச்சிகளைப் பயன்படுத்தினர்.
- அவர்கள் சக்கர வண்டிகளைப் பயன்படுத்தினர். ஆரக்கால் இல்லாத, திடமான சக்கரங்களைப் பயன்படுத்தினர்.
- மெசபடோமியாவுடன் விரிவான கடல் வணிகம் நடைபெற்றிருக்கிறது. சிந்துவெளி முத்திரைகள் தற்கால ஈராக், குவைத் மற்றும் சிரியா ஆகிய பகுதிகளைக் குறிக்கும் பண்டைய மெசபடோமியாவில் உள்ள சுமேர் பகுதிகளில் கிடைத்துள்ளமை இதை உறுதிப்படுத்துகிறது.
- சுமேரியாவின் அக்காடிய பேரரசிற்குட்பட்ட அரசன் நாரம் - சின் என்பவர் சிந்துவெளிப் பகுதியிலுள்ள மெலுக்கா என்னும் இடத்தில் இருந்து அணிகலன் வாங்கியதாக நாரம்-சின் குறித்த காவியத்தில் கூறப்பட்டுள்ளது.
- போக்குவரத்திற்குக் காளைகளைப் பயன்படுத்தினர்.
- பாரசீக வளைகுடா மற்றும் மெசபடோமியாவில் கண்டுபிடிக்கப்பட்டதைப் போன்று உருளை வடிவ முத்திரைகள் சிந்து வெளிப்பகுதியிலும் காணப்படுகின்றன. இது இந்த இரு பகுதிகளுக்கும் இடையில் வணிகம் நடைபெற்றதைக் காட்டுகிறது.

**கப்பல் கட்டும் தளம் - லோத்தல்**

- தற்கால குஜராத்திலுள்ள லோத்தலில் கப்பல் கட்டும் மற்றும் செப்பனிடும் தளம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இது அவர்கள் மேற்கொண்ட கடல் வணிகத்தை உறுதிப்படுத்துகிறது.
- லோத்தல் என்னும் இடம் குஜராத்தில் சபர்மதி ஆற்றின் ஒரு துணை ஆற்றின் கரையில் அமைந்துள்ளது.

**மொகஞ்சதாரோ - தலைவர்**

- அமர்ந்த நிலையில் உள்ள ஓர் ஆண் சிலை மொகஞ்சதாரோவில் உள்ள ஒரு கட்டிடத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- அது நெற்றியில் ஒரு தலைப்பட்டையுடனும் வலது கை மேல்பகுதியில் ஒரு சிறிய அணிகலனுடனும் காணப்படுகிறது.
- அதன் தலை முடியும், தாடியும் நன்றாக ஒழுங்குபடுத்தப்பட்டு காணப்படுகிறது.

## பண்டைய நாகரிகங்கள்

9 ஆம் வகுப்பு - சமூக அறிவியல்

### சிந்துவெளி நாகரிகம்

ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படும் சிந்துவெளி நாகரிகம் இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் சுமார் 1.3 மில்லியன் சதுர கிலோமீட்டர்கள் பரவியிருந்தது.

### ஹரப்பா நாகரிகம் எல்லை

| | |
|---|---|
| மேற்கு | பாகிஸ்தான் - ஈரான் எல்லையில் உள்ள சுட்காஜென்-டோர் |
| வடக்கு | ஷோர்டுகை (ஆப்கனிஸ்தான்) |
| கிழக்கு | ஆலம்கீர்பூர் (உத்திரப்பிரதேசம் - இந்தியா) |
| தெற்கு | டைமாபாத் (மஹாராஷ்ட்ரா - இந்தியா) |

இப்பரப்பில் ஹரப்பா நாகரிகத்துக்கான பல சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்நாகரிகம், பரவியுள்ள முக்கிய பகுதிகள் குஜராத், பாகிஸ்தான், இராஜஸ்தான் மற்றும் ஹரியனா.

ஹரப்பா தான் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இடம் என்பதால், சிந்துவெளி நாகரிகம் ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த நாகரிகம் சிந்து நதிக்கு அப்பாலும் பரவியுள்ளதால் சிந்து சமவெளி நாகரிகம் என்று முன்னர் அழைக்கப்பட்டதற்கு மாறாக ஹரப்பா நாகரிகம் என்று அழைக்கப்படுகிறது.

### திட்டமிடப்பட்ட நகரங்கள்

ஹரப்பா நகரங்களில் கோட்டை சுவர்கள், நன்கு திட்டமிடப்பட்ட தெருக்கள், சந்துகள், கழிவுநீர்க் கால்வாய்கள் ஆகியவை காணப்படுகின்றன. ஹரப்பா மக்கள் சுட்ட, சுடாத செங்கற்களையும், கற்களையும் கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தினார்கள். உள்ளாட்சி அமைப்பு ஒன்று நகரங்களின் திட்டமிடலை கட்டுப்படுத்தியிருக்கக் கூடும். சில வீடுகளில் மாடிகள் இருந்தன.

மொஹஞ்சதாரோவில் உள்ள மாபெரும் குளியல் குளம் ஒரு முக்கியமான கட்டுமானமாகும். இக்குளத்தின் அருகே நன்கு தளமிடப்பட்ட பல அறைகளும் உள்ளன. தோண்டியெடுக்கப்பட்ட சில கட்டுமானங்கள் களஞ்சியங்கள் போல் காணப்படுகின்றன.

ஹரப்பர்களின் அரசு அமைப்பு பற்றி நமக்கு விபரங்கள் தெரியவில்லை. ஆனால், பண்டைய அரசு போன்ற ஒரு அரசியலைமைப்பு ஒன்று இருந்திருக்க வேண்டும். மொஹஞ்சதாரோவிலிருந்து கிடைத்துள்ள ஒரு சிலை "பூசாரி அரசன்" என்று அடையாளம் காட்டப்படுகிறது. ஆனால் அது சரியானதா என்று உறுதிப்படுத்த முடியவில்லை.

### சிந்துவெளி நாகரிகத்தின் முக்கியமான நகரங்கள்

| | |
|---|---|
| ஹரப்பா | பஞ்சாப், பாகிஸ்தான் |
| மொஹஞ்சதாரோ | சிந்து, பாகிஸ்தான் |
| தோலாவிரா | குஜராத், இந்தியா |
| கலிபங்கன் | ராஜஸ்தான், இந்தியா |
| லோதால் | குஜராத், இந்தியா |
| பானவாலி | ராஜஸ்தான், இந்தியா |
| ராகிகரி | ஹரியானா, இந்தியா |
| சுர்கொடடா | குஜராத், இந்தியா |

### வேளாண்மையும் கால்நடை வளர்ப்பும்

ஹரப்பா மக்கள் வேளாண்மையில் ஈடுபட்டனர். அவர்கள் கோதுமை, பார்லி மற்றும் பலவிதமான தினை வகைகளைப் பயிரிட்டார்கள். இரட்டைச் சாகுபடி முறையையும் அவர்கள் கடைப்பிடித்தார்கள்.

ஆடு மாடு வளர்த்தலும் அவர்களுக்குத் தெரிந்திருந்தது. மாடுகள், செம்மறியாடுகள், வெள்ளாடுகளையும் அவர்கள் வளர்த்தார்கள். யானை உள்ளிட்ட பல விலங்குகள் பற்றி அறிந்திருந்தார்கள். ஆனால் குதிரைகளைப் பயன்படுத்தவில்லை. ஹரப்பாவின் மாடுகள் ஜெபு என்றழைக்கப்படும். இது ஒரு பெரிய வகை மாட்டின் இனம். சிந்துவெளி முத்திரைகளில் இவ்வகையான பெரிய காளை உருவம் பரவலாகக் காணப்படுகிறது.

### மட்பாண்டக் கலை

ஹரப்பா மக்கள் ஓவியங்கள் தீட்டப்பட்ட மட்பாண்டங்களைப் பயன்படுத்தினார்கள். மட்பாண்டங்கள் ஆழமான சிவப்பு வண்ணம் பூசப்பட்டு கருப்பு நிற ஓவியங்கள் தீட்டப்பட்டவை.

பீடம் வைத்த தட்டு, தானியம் போன்றவற்றைச் சேமித்து வைப்பதற்கான ஜாடிகள், துளையிடப்பட்ட ஜாடிகள், கோப்பைகள், 'S' வடிவ ஜாடிகள், தட்டுகள், சிறுதட்டுகள், கிண்ணங்கள், பானைகள் என்று பலவிதமான மட்பாண்டங்களைச் செய்தார்கள். அவர்கள் மட்பாண்டங்களில் சித்திரங்களைத் தீட்டினார்கள்.

அரசமர இலை, மீன் செதில், ஒன்றையொன்று வெட்டும் வட்டங்கள், குறுக்கும் நெடுக்குமான கோடுகள், கிடைக் கோட்டுப் பட்டைகள், கணித வடிவியல் (ஜியோமதி) வடிவங்கள், செடி, கொடிகள் எனப் பல்வேறு ஓவியங்களைக் கருப்பு நிறத்தில் தீட்டினார்கள்.

### உலோகக் கருவிகளும் ஆயுதங்களும்

ஹரப்பா பண்பாட்டு மக்கள் செர்ட் என்ற சிலிகா கல் வகையில் செய்த பிளேடுகள், கத்திகள், செம்புப் பொருட்கள், எலும்பாலும் தந்தத்தாலும் செய்யப்பட்ட

கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தினார்கள். இரும்பின் பயனை அவர்கள் அறியவில்லை.

கூர்மையான கருவிகள், உளிகள், ஊசிகள், மீன் தூண்டில் முட்கள், கத்திகள், நிறுவைத் தட்டுகள், முகம் பார்க்கும் கண்ணாடி, அஞ்சனம் தீட்டும் குச்சி ஆகியவை செம்பால் செய்யப்பட்டன. செம்பில் செய்த அம்புகள், ஈட்டிகள், உளி, கோடரி ஆகிய கருவிகளைப் பயன்படுத்தினார்கள்.

மொஹஞ்சதாரோவில் கிடைத்துள்ள நடனமாடும் பெண்ணின் சிலை, அவர்களுக்கு மெழுகு அச்சில் உலோகத்தை உருக்கி ஊற்றி சிலை வார்க்கும் 'லாஸ்ட் வேக்ஸ்' தொழில் நுட்பம் (lost - wax process) தெரிந்திருந்தது என்பதைக் காட்டுகிறது.

ரோஹ்ரி சேர்ட் என்பவை பாக்கிஸ்தானிலுள்ள ரோஹ்ரி என்ற பகுதியிலிருந்து பெறப்பட்ட செர்ட் மூலப்பொருள்களைக் குறிக்கிறது. இவை ஹரப்பா மக்களால் கூர் ஆயுதங்களை (Blades) உருவாக்கப் பயன்படுத்தப்பட்டன.

ஹரப்பா மக்கள் கல் மற்றும் வெண்கலத்தினாலான ஆயுதங்களைப் பயன்படுத்தினர்.

### ஆடை, அணிகலன்கள்

ஹரப்பா பண்பாட்டு மக்கள் பருத்தி மற்றும் பட்டு பற்றி அறிந்திருந்தார்கள். உலோகத்தாலும் கல்லாலுமான அணிகலன்களைப் பயன்படுத்தினார்கள். அவர்கள் செம்மணிக்கல் (கார்னிலியன்), செம்பு மற்றும் தங்கத்தாலான அணிகலன்களைச் செய்தார்கள். கல் அணிகலன்களையும் சங்கு வளையல்களையும் செய்தார்கள். சிலவற்றில் அணி வேலைப்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன. இவற்றை அவர்கள் மெசபடோமியாவிற்கு ஏற்றுமதி செய்தார்கள்.

### வணிகமும் பரிமாற்றமும்

ஹரப்பா மக்களுக்கு மெசபடோமியர்களுடன் நெருங்கிய வணிகத் தொடர்பு இருந்தது. மேற்காசிய பகுதிகளான ஓமன், பஹ்ரைன், ஈராக், ஈரான் போன்ற பகுதிகளில் ஹரப்பா முத்திரைகள் கிடைத்துள்ளன.

கியூனிபார்ம் ஆவணங்கள் மெசபடோமியாவிற்கும், ஹரப்பர்களுக்கும் இடையே இருந்த வணிகத் தொடர்பை வெளிபடுத்துகின்றன. கியூனிபார்ம் எழுத்துகளில் காணப்படும் மெலுஹா என்ற குறிப்பு சிந்து பகுதியைக் குறிப்பதாகும்.

### எடைகளும் அளவுகளும்

ஹரப்பா மக்கள் முறையான எடைகளையும் அளவுகளையும் பயன்படுத்தினார்கள். வணிகப் பரிமாற்றங்களில் ஈடுபட்ட காரணத்தால் அவர்களுக்கு முறைப்படுத்தப்பட்ட அளவுகள் தேவையாக இருந்தது.

ஹரப்பா நாகரிகப்பகுதிகளில் கனசதுரமான செர்ட் எடைகள் கிடைத்துள்ளன. தராசுகளுக்கான செம்புத் தட்டுகள் கிடைத்துள்ளன. எடைகள் அவர்களுக்கு ஈரடிமான எண் முறை (பைனரி) பற்றி தெரிந்திருந்ததைக் காட்டுகின்றன. எடைகளின் விகிதம் 1 : 2 : 4 : 8 : 16 : 32 என்று இரண்டிரண்டு மடங்காக அதிகரித்தன.

### முத்திரைகள், எழுத்துருக்கள்

ஹரப்பா பண்பாட்டுப் பகுதிகளில் நுரைக்கல், செம்பு, சுடுமண் தந்தம் ஆகியவற்றால் செய்யப்பட்ட முத்திரைகள் கிடைத்துள்ளன. இவை வணிக நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம். ஹரப்பா எழுத்துகள் இதுவரை வாசிக்கப்படவில்லை.

ஹரப்பா பகுதிகளிலிருந்து சுமார் 5000 எழுத்துடைய சிறுஎழுத்துத்தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சில அறிஞர்கள் இவை திராவிட மொழியின என்று உறுதியாகக் கருதுகிறார்கள். சிந்துவெளி நாகரிகமே இந்தியப் பண்பாட்டு உருவாக்கத்துக்கான அடித்தளம் எனலாம்.

### கலைகள், பொழுதுபோக்குகள்

ஹரப்பா பகுதிகளில் கிடைத்துள்ள சுடுமண்ணாலான சிறுசிலைகள், மட்பாண்டங்களில் உள்ள ஓவியங்கள், வெண்கலச் சிலைகள் ஆகியவை ஹரப்பா மக்களின் கலைத் திறமையைக் காட்டுகின்றன.

மாக்கல்லில் செய்யப்பட்ட 'மதகுரு அல்லது அரசன்' செம்பில் வார்க்கப்பட்ட நடனமாடும் பெண் சிலை (இரண்டும் மொஞ்சதாரோவில் கிடைத்தவை), ஹரப்பா, மொகஞ்சதாரோ, தோலாவிராவில் கிடைத்த கற்சிலைகள் ஆகியவை இப்பகுதியின் முக்கியமான கலைப்படைப்புகள்.

பொம்மை வண்டிகள், கிலுகிலுப்பைகள், பம்பரங்கள், கோலிக்குண்டுகள், பல்வேறு விளையாட்டிற்கான சுடுமண் சில்லுகள் ஆகியவை ஹரப்பா மக்களின் பொழுதுபோக்கு விளையாட்டுகளைக் காட்டுகின்றன.

### சமயம்

சிந்துவெளி மக்கள் இயற்கையை வணங்கினார்கள். அரசமரத்தை வழிபட்டார்கள். சில சுட்ட களிமண் சிலைகள் பெண் தெய்வத்தைக் குறிப்பது போன்று உள்ளன. காலிபங்கனில் நெருப்புக் குண்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

இறந்தவர்களைப் புதைப்பது வழக்கத்திலிருந்து. இறந்தவர்களை எரிக்கும் வழக்கம் இருந்ததற்கான சான்றுகள் அரிதாகக் கிடைத்துள்ளன.

**ஹரப்பா மக்களும், பண்பாடும்**

ஹரப்பா மக்களின் எழுத்துகளுக்கான பொருள் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதால் ஹரப்பா நாகரிகம் பற்றி முழுமையாக அறிய முடியாமல் உள்ளது. அவர்கள் திராவிட மொழியைப் பேசினார்கள் என்று அறிஞர்களில் ஒரு சாரார் கூறுகிறார்கள்.

தொல்லியல் ஆய்வுகள் நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு அவர்கள் கிழக்கு நோக்கியும், தெற்கு நோக்கியும் இடம்பெயர்ந்ததைக் காட்டுகின்றன. ஹரப்பா மக்களில் சிலர் இந்தியாவின் பல்வேறு இடங்களுக்கும் குடிபெயர்ந்திருக்க வாய்ப்புகள் உண்டு. அவர்களது எழுத்துகளுக்குப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டால் மட்டுமே பல கேள்விகளுக்கு உறுதியான பதில் கிடைக்கும்.

சிந்துவெளி நாகரிகத்தில் ஒன்றுக்கும் அதிகமான குழுக்கள் இருந்தன. சிந்துவெளியில் விவசாயிகள், கால்நடை வளர்ப்போர் - உணவு சேகரிப்போர் உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

**சிந்துவெளி காலக்கட்டம்**

| காலக்கட்டம் | காலம் |
|---|---|
| தொடக்க ஹரப்பா | கி.மு.(பொ.ஆ.மு.) 3300 - 2600 |
| முதிர்ந்த ஹரப்பா | கி.மு.(பொ.ஆ.மு.) 2600 - 1900 |
| பிந்தைய ஹரப்பா | கி.மு.(பொ.ஆ.மு) 1700 வரை |

**சிந்துவெளி நாகரிகத்தின் வீழ்ச்சி**

சுமார் கி.மு. (பொ.ஆ.மு) 1900லிருந்து சிந்துவெளி நாகரிகம் வீழ்ச்சி பெறத் துவங்கியது. பருவநிலை மாற்றம், மெசபடோமியாவுடனான வணிகத்தில் வீழ்ச்சி, நதியின் வறட்சி அல்லது வெள்ளப்பெருக்கு, அந்நியர் படையெடுப்பு ஆகியவை இந்த நாகரிகம் வீழ்ச்சி பெறவும், மக்கள் தெற்கு மற்றும் கிழக்கு திசை நோக்கி இடம் பெயரவும் சில முக்கியமான காரணங்களாக அமைந்தன எனக் கருதப்படுகிறது. சிந்துவெளி நாகரிகம் முற்றிலுமாக அழிந்துவிடவில்லை. அது கிராமப் பண்பாடாக இந்தியாவில் தொடர்ந்தது.

**சிந்துவெளி எழுத்துகள் - ஆய்வு**

- ஹரப்பா மக்கள் எழுதும் கலையை அறிந்திருந்தனர்.
- இந்த எழுத்துகள் இலச்சினைகள், சுடுமண் முத்திரைகள், மட்பாண்டங்கள் ஆகியவற்றில் காணப்படுகின்றன.
- பொறிப்புகள் மிகவும் குறுகியவை. தொடர்கள் சராசரியாக ஐந்துக்கும் குறைவான குறியீடுகளையே கொண்டுள்ளன.
- ரோசட்டா கல்லில் காணப்பட்டது போல மும்மொழிகள் பயன்படுத்தப்படவில்லை.
- எழுத்துகள் வலப் பக்கத்திலிருந்து இடப் பக்கமாக எழுதப்பட்டுள்ளன.
- கணினி மூலம் பகுப்பாய்வு செய்த இரஷ்ய அறிஞர் யூரி நோரோசோவ் சிந்துவெளி எழுத்துகள் திராவிட மொழிக் குடும்பம் போன்ற வார்த்தை வரிசையைப் பெற்றுள்ளன என்கிறார்.
- சிந்துவெளி நாகரிகம் குறித்து விரிவான ஆய்வு செய்துள்ள அறிஞரான ஐராவதம் மகாதேவன் "ஹரப்பா மொழியின் மூல வேர்கள் தென்னிந்திய திராவிட மொழிகளை ஒத்திருப்பதை நாம் காணலாம்" என்கிறார்.
- மயிலாடுதுறையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள கற்கோடரியில் உள்ள குறியீடுகள் சிந்துவெளியில் கண்டெடுக்கப்பட்டவையில் உள்ள குறியீடுகளை ஒத்திருக்கின்றன என்று கூறுகிறார் ஐராவதம் மகாதேவன்.
- மே 2007ஆம் ஆண்டு தமிழ்நாடு தொல்லியல் துறையால் பூம்புகாருக்கு அருகில் மேலபெரும்பள்ளம் என்னும் இடத்தில் கண்டெடுக்கப்பட்ட பானைகளில் உள்ள அம்பு போன்ற குறியீடுகள் மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட இலச்சினைகளைப் போன்று உள்ளன.
- வரலாற்று அறிஞர் பர்போலாவின் கருத்துப்படி, சிந்துவெளி எழுத்துக்களின் குறியீடுகள் திராவிட ஒற்றைக் குறிப்பு வேர்களுடன் ஒத்துப்போகின்றன.

## பண்டைய இந்தியா : தொடக்கம் முதல் சிந்து நாகரிகம் வரை

11 ஆம் வகுப்பு - வரலாறு

**சிந்து நாகரிகம்**

**இந்தியாவில் முதற்கட்ட நகரமயமாக்கத்தின் சின்னம்** சிந்து நாகரிகமாகும். சிந்து பகுதியில் நாகரிகம் உச்சத்தில் இருந்தபோது, **இடைக்கற்காலம், புதிய கற்காலம்** உள்ளிட்ட பல பண்பாடுகள் இந்தியாவின் மற்ற பகுதிகளில் நிலவின.

**பெயரிடு முறையும் படிநிலைகளும் காலவரிசையும்**

இந்தியாவின் **வடமேற்குப்பகுதியிலும் பாகிஸ்தானிலும் பொ.ஆ.மு.** 3000 கால அளவில் தோன்றிய நாகரிகங்களும் பண்பாடுகளும் மொத்தமாகச் சிந்து நாகரிகம் எனப்படும். இந்நாகரிகம் அடையாளம் காணப்பட்ட **முதல் இடம் ஹரப்பா** என்பதால், இது ஹரப்பா நாகரிகம் என்றும் அழைக்கப்படுகிறது. ஹரப்பா நாகரிகம் திடீரென்று **ஒரே நாளில் தோன்றிவிடவில்லை.** இப்பகுதியில் புதிய கற்காலக் கிராமங்களின் தொடக்கம் நடைபெற்றது ஏறத்தாழ **பொ.ஆ.மு.** 7000 (புதிய கற்காலப் பகுதியான **மெஹர்காரின்** காலத்தைப் போல) எனக் கணிக்கப்படுகிறது.

ஹரப்பா நாகரிகம் பல்வேறு கட்டங்களாகப் (படிநிலைகள்) பின்வருமாறு பிரிக்கப்பட்டுள்ளது.

**மற்றும் நீர் நிலைகள் காய்ந்து வற்றிப்போதல்** ஆகியவை வீழ்ச்சிக்கான காரணங்களாக வரலாற்றாசிரியர்களால் கணிக்கப்படுகின்றன.

சிந்து நாகரிகத்தின் அழிவுக்குப் படையெடுப்பு, வெள்ளம், ஆறு தன் போக்கை மாற்றிக்கொண்ட நிகழ்வு ஆகிய காரணங்களும் முன்வைக்கப்படுகின்றன. காலப்போக்கில் இம்மக்கள் சிந்து பகுதியிலிருந்து தெற்கு நோக்கியும் கிழக்கு நோக்கியும் இடம்பெயர்ந்தார்கள்.

**சிந்து நாகரிகமும் தமிழ் நாகரிகமும்**

இந்திய வரலாற்றில் நிகழ்ந்த முதல் நகரமயமாக்கத்தின் வெளிப்பாடு சிந்து நாகரிகமாகும். சிந்து நாகரிகத்தின் தோற்றமும் தோற்றுவித்தவர்கள் குறித்த செய்திகளும் விவாதத்துக்கு உரியனவாகவே உள்ளன. சிந்து எழுத்துகளின் பொருளை இன்னும் கண்டறிய முடியவில்லை. தென்னிந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத் தாழிகளில் மெல்லிய கீறல்களாக எழுதப்பட்ட வாசகங்களும் சில இடங்களின் பெயர்களும் சிந்து நாகரிகத்துக்கும் தமிழ் பண்பாட்டுக்கும் இடையேயான உறவை நிறுவுவதற்கான சான்றுகளாக முன்வைக்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவிலும் இடைக்கற்காலத்திலிருந்து தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்து வந்ததற்குப் பல தொல்லியல் சான்றுகள் உள்ளன. இவர்களில் சில சமூகங்கள் சிந்து பகுதியிலிருந்து இடம்பெயர்ந்திருக்கலாம் என்பதை மறுக்க முடியாது. எனினும் உறுதியானதொரு முடிவுக்கு வர இன்னும் அதிக ஆய்வுகள் தேவை. பழந்தமிழகத்தைச் சேர்ந்த ஊர்களான அரிக்கமேடு, கீழடி, உறையூர் போன்றவை இந்தியாவில் நடந்த இரண்டாம் நகரமயமாக்கத்தின் பகுதிகள் ஆகும். இந்த ஊர்கள் சிந்து நகரங்களிலிருந்து மிகவும் வேறுபட்டதாக உள்ளன.

## புத்தகப் பயிற்சி வினா - விடைகள்

1. சிந்துவெளி மக்கள் எந்த உலோகங்களைப் பற்றி அறிந்திருந்தனர்?
   அ) செம்பு, வெண்கலம், வெள்ளி, தங்கம்
   ஆ) செம்பு, வெள்ளி, இரும்பு, வெண்கலம்
   இ) செம்பு, தங்கம், இரும்பு, வெள்ளி
   ஈ) செம்பு, வெள்ளி, இரும்பு, தங்கம்

2. சிந்துவெளி நாகரிகம் எக்காலத்தைச் சார்ந்தது
   அ) பழைய கற்காலம்
   ஆ) இடைக்கற்காலம்
   இ) புதிய கற்காலம்
   ஈ) உலோக காலம்

3. ஆற்றங்கரைகள் 'நாகரிகத்தொட்டில்கள்' என அழைக்கப்படக் காரணம்
   அ) மண் மிகவும் வளமானதால்
   ஆ) சீரான கால நிலை நிலவுவதால்
   இ) போக்குவரத்திற்குப் பயனுள்ளதாக இருப்பதால்
   ஈ) பெரும்பாலான நாகரிகங்கள் ஆற்றின் கரைகளில் தோன்றியதால்.

4. சரியான விடையைத் தேர்ந்தெடு.
   கூற்று : ஹரப்பா நாகரிகம் ஒரு நகர நாகரிகம் எனலாம்.
   காரணம் : திட்டமிடப்பட்ட நகர அமைப்பு, மேம்பட்ட கழிவு நீர் அமைப்பு

   அ) கூற்றும் காரணமும் சரி.
   ஆ) கூற்று தவறு, காரணம் சரி.
   இ) கூற்று சரி, காரணம் தவறு
   ஈ) கூற்றும் காரணமும் தவறு.

5. சரியான விடையைத் தேர்ந்தெடு.
   கூற்று : ஹரப்பா நாகரிகம் வெண்கல காலத்தைச் சேர்ந்தது.
   காரணம் : ஹரப்பா மக்களுக்கு இரும்பின் பயன் தெரியாது.

   அ) கூற்றும் காரணமும் சரி.
   ஆ) கூற்று தவறானது, காரணம் சரி.
   இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.
   ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

6. சரியான விடையைத் தேர்ந்தெடு.
   கூற்று - ஹரப்பா மக்களின் பொறியியல் திறன் குறிப்பிடத்தக்கது.
   காரணம் - கடலின் அலைகள், ஓதங்கள் நீரோட்டத்தைக் கணித்த பின் கப்பல் கட்டும் தளத்தைக் கட்டியிருப்பது.

   அ) கூற்றும் காரணமும் சரி
   ஆ) கூற்று தவறானது, காரணம் சரியானது.
   இ) கூற்று சரியானது, ஆனால் அதற்கான காரணம் தவறானது.
   ஈ) கூற்று மற்றும் காரணம் தவறானவை.

7. கீழே கூறப்பட்டுள்ள மொகஞ்சதாரோவை பற்றிய கூற்றுகளில் எவை சரியானவை?
   அ) தங்க ஆபரணங்கள் பற்றித் தெரியவில்லை.
   ஆ) வீடுகள் சுட்ட செங்கற்களால் கட்டப்பட்டன.
   இ) கருவிகள் இரும்பினால் செய்யப்பட்டன.
   ஈ) பெருங்குளம் நீர் கசியாமல் இருப்பதற்காக பல அடுக்குகளால் இயற்கை தார் கொண்டு பூசப்பட்டன.

## சிந்துவெளி நாகரிகம்

11 ஆம் வகுப்பு - அறவியலும் இந்தியப் பண்பாடும்

தற்கால மனித சமூகம், அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக, மிக உயரிய வாழ்க்கை நிலையை அடைந்திருக்கிறது. இச்சமூகம் கடந்துவந்த பல்வேறு காலச் சூழல்களை அறிந்துகொள்ள, தொல்லியல் ஆய்வுகள் உதவுகின்றன. அவ்வகையில் சிந்துவெளிப் பகுதியின் பல்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வு முடிவுகள், சிந்துவெளி நாகரிகம் பற்றிய செய்திகளை வெளிக்கொணர்ந்தன.

இந்நாகரிகம், உலகில் தோன்றிய சிறந்த நாகரிகங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்நாகரிக நகர அமைப்பு, கட்டடக்கலை, சமூகம், சமயம், பொருளாதாரம், வணிகம் ஆகியவற்றில் மக்கள் சிறந்து விளங்கினர் என்பதைப் பல அகழாய்வு சான்றுகள் வெளிப்படுத்துகின்றன.

இந்தியாவில் தோன்றிய பழைமையான நாகரிகம், ‘சிந்துவெளி நாகரிகம்‘. இந்நாகரிகம், சிந்துநதிக்கரையில் செழித்து வளர்ந்த ‘நகர நாகரிகம்’ ஆகும். இது, சிந்து ஆற்றங்கரையில் தோன்றி வளர்ந்தமையால் ’சிந்துவெளி நாகரிகம்’ என்று அழைக்கப்படுகிறது. இங்கு வாழ்ந்தவர்கள் இந்தியாவின் பழமையான குடிமக்களே என்ற கருத்தொற்றுமை நிலவுகிறது. சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகள் பழைமையான இந்நகர நாகரிகம், முதன்முதலில் 1921 இல் கண்டறியப்பட்டது. பழைய **பஞ்சாபின் மாண்ட்கொமரி** மாவட்டத்தில் (பாகிஸ்தான்) ராவி-சட்லெஜ் ஆறுகளுக்கு இடையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட (1920) தொல்பொருள் சின்னம் **‘ஹரப்பா’** எனப்படுவதாகும். **1922 ஆம் ஆண்டு, சிந்து மாகாணத்தில் (பாகிஸ்தான்) லர்க்கானா** மாவட்டத்தில் எழுபது அடி உயரமுள்ள மண்மேடு ஒன்று அகழ்ந்தெடுக்கப்பட்டது. இச்சின்னத்தை ‘மொகஞ்சதாரோ’ என்பர்.

இந்த அகழ்வாய்வினை மேற்கொண்ட தொல்லியலாளர் ‘சர் ஜான் மார்ஷல்’. இவர் தொல்பழங்காலத்திலேயே சிறப்புற்று விளங்கிய திராவிட நாகரிகத்துடன் சிந்துவெளி நாகரிகத்தை ஒப்பிடுகிறார். இவரின் கூற்றுப்படி, இந்த நாகரிகம் வேதகாலத்திற்கு முற்பட்டதாக உள்ளது எனவும், இதன் காலம் கி.மு. (பொ.ஆ.மு.) 3250 முதல் கி.மு. (பொ.ஆ.மு.) 2750 வரை எனவும் குறிப்பிட்டுள்ளார். இதைப் பெரும்பாலான வரலாற்று ஆய்வாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

மேலும் சாகுந்தாரோ, கோட்டிஜி, லோத்தல், காளிபங்கன் போன்ற இடங்களில் சிந்துவெளி நாகரிகச் சின்னங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆதிச்சநல்லூர், அரிக்கமேடு ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட தொல்பொருள் அகழாய்வுகள், தமிழ்நாட்டிற்கும் சிந்துவெளி நாகரிகத்திற்குமிடையே தொடர்பு இருப்பதை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் மிகப்பழைமையான நகர நாகரிகம் தமிழகத்தில் இருந்திருக்க வேண்டும் என்பதைத் தொல்லியலாளர்கள் உறுதிப்படுத்துகின்றனர்.

### சான்றுகள்

மக்கள் பயன்படுத்திய முத்திரைகள், மட்பாண்டங்கள், நீர் அருந்தும் குவளைகள், மோதிரங்கள், சுடுமண் பொம்மைகள், மணிகள், உலோக வளையல்கள், இரத்தினக்கற்கள் மற்றும் கட்டடச் சிதைவுகள் போன்றவை சிந்துவெளி அகழாய்வில் கண்டறியப்பட்டுள்ளன. இவை அங்கு வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முறையினை உலகிற்கு அறிவிக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

### சிந்துவெளி நாகரிகமும் தமிழர் நாகரிகமும்

தற்போது தென்கோடித் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற இடப்பெயர்கள் சிந்துவெளி நாகரிகம் தோன்றி வளர்ந்த பகுதியிலும் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளமை என்பது குறிப்பிடத்தக்கதாகும். தமிழ்நாட்டின் ஆரணி, கொற்கை, மைலம், மானூர், நாகல், தொண்டி, கண்டிகை போன்ற இடப்பெயர்கள் தற்போதைய பாகிஸ்தானிலும் (பண்டைய சிந்துவெளி பகுதி) வழக்கத்தில் உள்ளன.

அதேபோல் தமிழ்நாட்டிலுள்ள ஆலூர், ஆசூர், படூர், இஞ்சூர், குந்தா, நாகல், தானூர், செஞ்சி போன்ற இடப்பெயர்கள் தற்போதைய ஆப்கானிஸ்தானில் உள்ளன. திராவிடர்கள் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான் போன்ற பகுதிகளில் வாழ்ந்தனர் என்பதை இதன் மூலம் அறியலாம்.

பலுசிஸ்தானில் பிராகுயி என்ற திராவிட மொழி இன்றுவரை பேசப்பட்டு வருகிறது. தமிழ்பிராமி, வட்டெழுத்து மற்றும் வரிவடிவங்களில் பொறிக்கப்பட்டுள்ள தொடக்ககாலத் தமிழ்க் கல்வெட்டுகளில் காணப்படும் பல இடப்பெயர்கள் இன்றைய பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற வடமேற்கு நிலப்பகுதிகளில் நிலைத்திருப்பது வியப்புக்குரியது. சிந்துவெளி நாகரிகத்தை விரிவாக ஆய்வு செய்த சர் ஜான் மார்ஷல் ஹரப்பா, மொகஞ்சதாரோ நகரங்கள் இந்தியாவின் பிற பகுதிகளுடன் தொடர்பு கொண்டிருந்ததை உறுதிப்படுத்தியுள்ளார்.

### குடிமக்கள்

திராவிடர்கள், மத்தியத் தரைக்கடல் இனத்தினர், முந்தைய ஆஸ்ட்ரோலாய்டுகள், ஆல்பைன்கள் மற்றும் மங்கோலியர்கள் போன்றோர் சிந்துவெளிப்பகுதியில் வாழ்ந்ததாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனாலும், இந்நாகரிகத்தை தோற்றுவித்த பெருமக்கள் யார் என்பது இன்னும் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. இவர்கள்

திராவிடர்களாகத் தான் இருக்க வேண்டும் என்பது சர் ஜான் மார்ஷல், ஆர். டி. பானர்ஜீ, ஹீராசு பாதிரியார் போன்றோர்களின் கருத்தாகும். மேலும், சிந்துவெளியில் பேசப்பட்டு வந்த மொழி, பண்டைய தமிழ்மொழியே என்பதும் அவர்களது கருத்தாகும்.

**திராவிடர்கள் யார்?**

பண்டைய காலத்தில், தமிழ்நாட்டுக்கு வந்த யவனர்கள் (கிரேக்கர்கள்), இந்நாட்டைத் 'திரிமிளிகே' என்று அழைத்தனர். காஞ்சியை ஆட்சி செய்த நந்திவர்ம பல்லவன் தமிழ் அரசர்களை 'திராவிட மன்னர்கள்' என்றே குறிப்பிட்டுள்ளார். கங்காதேவி என்பவர் தாம் எழுதிய 'மதுரா விஜயம்' என்ற நூலில் தமிழ்நாட்டைத் 'திராவிட தேசம்' என்றும், தமிழ் மன்னர்களை 'திரமிள ராஜாக்கள்' என்றும் குறிப்பிட்டுள்ளார். பழங்காலந்தொட்டே 'தமிழ்' என்ற சொல்லைப் பிற மொழியினர் திரமிளா, திரவிடா, திராவிடா என்ற சொற்களால் குறிப்பிட்டு வந்துள்ளனர்.

சிந்துவெளி நாகரிகத் தொல்பொருள் ஆய்வை மேலும் விரிவுபடுத்தி அறிவியல் முறைகளையும், தொழில்நுட்பங்களையும் கையாண்ட பிரிட்டானியத் தொல்லியல் அறிஞரான சர். மார்டிமர் வீலர் (Sir Mortimer Wheeler) அது 'நகர நாகரிகம்' என்பதை உறுதி செய்தார். இது ஆரியர்கள் வருகைக்கு முன்பாகவே வளர்ந்து உச்ச நிலையில் இருந்தது. ஆரியர் இந்தியாவுக்கு வந்தபோது திராவிடர்கள் சுமேரியா, பாபிலோனியா போன்ற நாடுகளுடன் வணிகத் தொடர்பு கொண்டிருந்தனர். திராவிடர்களே கலை நயத்திற்கும், பண்பட்ட வாழ்க்கைக்கும் பழக்கப்பட்டிருந்தனர். ஆகவே, சிந்துவெளி நாகரிகமானது ஆரிய நாகரிகத்திற்கு முன்பே வளர்ச்சி அடைந்த ஒரு நகர நாகரிகமாகத் திகழ்ந்தது.

கீழடி தொல்லியல் களம் என்பது, இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் அகழாய்வு செய்யப்பட்டு வரும் ஒரு சங்க கால வசிப்பிடம் ஆகும். இந்த அகழாய்வு மையம், தமிழ்நாட்டில் மதுரைக்குத் தென்கிழக்கில் 12 கி.மீ. தொலைவில் சிவகங்கை மாவட்டத்தில் கீழடி என்ற ஊருக்கு அருகில் அமைந்துள்ளது. ஆதிச்சநல்லூர் தொல்லியல் களத்துக்கு அடுத்து, இந்தியத் தொல்லியல் ஆய்வு நிறுவனத்தால் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் பெரிய அளவிலான அகழாய்வு இதுவேயாகும்.

**நகர அமைப்பும் கட்டடங்களும்**

சிந்துவெளியில் மைய அரசு இருந்தமைக்கான சான்றுகள் மொகஞ்சதாரோவில் கிடைத்துள்ளன. இதற்குப் பல தூண்களைத் தாங்கும் மன்றம், பொதுக்கூடம் முதலியவை முக்கியச் சான்றுகளாகத் திகழ்கின்றன. இங்கு வாழ்ந்த மக்கள், வணிகத்தில் சிறந்து விளங்கினர். மேலும், இவர்கள் பெரும்பொருள் சேர்த்து மாட மாளிகைகளில் வாழ்ந்தனர்.

நகரத்தின் தெருக்கள் அகலமாகவும், நேராகவும், சுகாதார வசதி கொண்டனவாகவும் அமைக்கப்பட்டிருந்தன. தெருக்கள் கிழக்கு மேற்காகவும், வடக்குத் தெற்காகவும் அமைந்திருந்தன. பெரிய தெருக்கள் 33 அடி அகலமும், சிறிய தெருக்கள் 9 அடிமுதல் 12 அடிவரை அகலம் கொண்டதாகவும் இருந்தன. பெரிய தெருக்களில் மக்கள் நடந்து செல்லும் நடைபாதையும் இருந்தது. மூன்று வண்டிகள் ஒரே வரிசையில் செல்லும்வகையில் பெரிய சாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. அனைத்து வீடுகளிலும் கிணறுகளும், குளியலறைகளும் இருந்தன. அக்குளியலறைகள், கழிவுநீர் செல்வதற்கு ஏற்ற வகையில் தெருவின் அருகிலேயே அமைக்கப்பட்டிருந்தன. இதைப் பார்க்கும்போது, பாபிலோனிய நகரங்களை விஞ்சிய சிறந்த நகரமைப்பைச் சிந்துவெளி மக்கள் பெற்றிருந்தனர் என்பதை அறிகிறோம்.

**கட்டடக்கலை**

சிந்துவெளியில் ஹரப்பாவிலும், மொகஞ்சதாரோவிலும் ஊருக்குப் புறத்தே கோட்டைக் கொத்தளங்கள் அமைக்கப்பட்டு இருந்தன. அவற்றின் உள்ளே மன்னரின் மாளிகைகளும், பெரிய நீராடும் குளங்களும், நெற்களஞ்சியங்களும் மேடான சாலைகளும் இருந்தன. மேற்குத் திசையில் மேடான நிலத்தில் கோட்டையும், கிழக்கே குடியிருப்புப் பகுதியும் அமைந்திருந்தன.

ஒவ்வொரு வீடும் பல அடுக்கு மாடிகளைக் கொண்டதாக இருந்தது. கட்டடங்கள் கட்டுவதற்குச் சுட்டசெங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன. அச்செங்கற்கள் மிகவும் உறுதியாக இருந்தன. கிணற்றுச்சுவர், சாக்கடைச்சுவர் போன்ற வளைந்த சுவர்களைக் கட்டுவதற்கு ஆப்பு வடிவச் செங்கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. சுவர்களில், செங்கற்களை இணைப்பதற்கு ஒரு வகையான சாந்தைப் பயன்படுத்தி உள்ளனர். பண்டைய தமிழ்மக்கள் பயன்படுத்திய செங்கற்களின் தன்மையும், அளவும் சிந்துவெளி மக்கள் பயன்படுத்திய செங்கற்களோடு ஒத்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**நீச்சல் குளம்**

சிந்துவெளியில் கிடைத்துள்ள கட்டடங்களில் தலசிறந்தது, மொகஞ்சதாரோவிலுள்ள 'பொதுக்குளியல் குளமாகும்'. இக்குளத்திலிருந்து தண்ணீரை வெளியேற்றவும், புதிய நீரை உள்ளே கொண்டுவரவும், செங்கற்களால் கட்டப்பட்ட நீர்ப்பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. குளத்தின் தரைப்பகுதி நீரை உறிஞ்சாமல் இருப்பதற்காக, 'நீலக்கீல்' (Bitumen) என்ற பசையால் பூசப்பட்டிருந்தது. மக்கள், குளித்தபின்பு உடையை மாற்றிக்கொள்வதற்குக் குளத்தின் மேல் ஓரங்களில் பல அறைகள் இருந்தன.

தானியக்களஞ்சியம், லோத்தல் பொதுக்கட்டடங்கள் ஆகியவற்றின் வாயிலாகச் சிந்துவெளி மக்கள் கட்டடக்கலையில் சிறந்து விளங்கினார்கள் என்பதை அறிய முடிகிறது. மேலும், இவர்கள் பலநாடுகளுடன் வாணிகத் தொடர்பு கொண்டிருந்தமை பெருமைக்குரியதாகும். இவர்கள், இறந்த உடல்களை எவ்வாறு அடக்கம் செய்தார்கள் என்பதையும் சான்றுகளுடன் காண முடிகிறது.

குஜராத்திலுள்ள அகமதாபாத் மாவட்டத்தில் அகழ்வாராய்ச்சியின்போது S.R. ராவ் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட இடம் 'லோத்தல்' ஆகும். இவ்விடமானது சிந்துவெளி நாகரிக காலத்திலிருந்த துறைமுகமாகும். இது உலகில் மனிதனால் உருவாக்கப்பட்ட முதல் செயற்கைத் துறைமுகமாகும். இத்துறைமுகம் மூலமாக எகிப்து, மெசபடோமியா உள்ளிட்ட நாடுகளுடன் வாணிபம் நடைபெற்று வந்தன.

## புத்தகப் பயிற்சி வினா - விடைகள்

1. சிந்துவெளி நாகரிகம் குறித்து அகழாய்வு மேற்கொண்ட தொல்லியலாளர்
அ) டாக்டர். ஸ்மித் ஆ) சர். ஜான்மார்ஷல்
இ) ஷில்டே ஈ) கே. எம். முன்ஷி

2. சிந்துவெளி மக்கள் தோல் நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்திய பொருள் ________.
அ) கட்டில் என்னும் மீனின் எலும்பு
ஆ) மானின் எலும்பு
இ) காண்டாமிருகத்தின் எலும்பு
ஈ) குதிரையின் எலும்பு

3. கங்காதேவி எழுதிய நூலின் பெயர்
அ) மதுராவிஜயம் ஆ) அர்த்தசாத்திரம்
இ) சாகுந்தலம் ஈ) இண்டிகா

4. பொருத்துக
அ) நீலக்கீல் — 1. ஹரப்பா
ஆ) கட்டில் — 2. குதிரை
இ) தானியக்களஞ்சியம் — 3. பசை
ஈ) அறியாத விலங்கு — 4. மீன்எலும்பு

அ) அ-3 ஆ-4 இ-1 ஈ-2
ஆ) அ-4 ஆ-3 இ-2 ஈ-1
இ) அ-2 ஆ-3 இ-4 ஈ-1
ஈ) அ-1 ஆ-2 இ-4 ஈ-3

5. பின்வரும் கூற்றையும், அதன் காரணத்தையும் படித்து விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.
கூற்று : ஹரப்பா மக்கள் அளக்கும் கருவியை அறிந்திருந்தனர்.
காரணம் : அளவைக்குறிகள் இடப்பட்ட குச்சிகள் அங்குக் கிடைத்துள்ளன.
அ) காரணம் சரி, கூற்று தவறு
ஆ) காரணம் தவறு, கூற்று சரி
இ) காரணம், கூற்று இரண்டும் சரி
ஈ) காரணம், கூற்று இரண்டும் தவறு

6. பசுபதி என்றச் சொல்லில் இருந்து பெறப்படும் பொருள்
அ) பெண்கடவுள்
ஆ) யோகிகளின் கடவுள்
இ) விலங்குகளின் கடவுள்
ஈ) இயற்கை கடவுள்

7. பின்வரும் கூற்றுகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.
   1. சித்திர எழுத்துகள் இடமிருந்து வலமாக எழுதப்பட்டவை.
   2. சித்திர எழுத்துகள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டவை.
   3. சித்திர எழுத்துகள் மேலிருந்து கீழாக எழுதப்பட்டவை.
   4. சித்திர எழுத்துகள் கீழிருந்து மேலாக எழுதப்பட்டவை.

அ) 1ம், 3ம் சரி ஆ) 1ம், 2ம் சரி
இ) 1ம், 4ம் சரி ஈ) 3ம், 4ம் சரி

8. சிந்துவெளி நாகரிகம் கண்டுப்பிடிக்கப்பட்ட ஆண்டு
அ) 1924 ஆ) 1930
இ) 1921 ஈ) 1923

9. சிந்துவெளி மக்கள் தரைவழிப் போக்குவரத்திற்குப் பயன்படுத்திய விலங்கு
அ) பசு ஆ) குதிரை
இ) யானை ஈ) எருது

10. சிந்துவெளி மக்கள் இம்மரத்தைப் முதன்மை தெய்வமாக கருதி வழிபட்டனர் ________.
அ) அரச மரம் ஆ) வேப்ப மரம்
இ) வன்னி மரம் ஈ) ஆல மரம்

### விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. | ஆ) | 2. | அ) | 3. | அ) | 4. | அ) | 5. | இ) |
| 6. | இ) | 7. | ஆ) | 8. | இ) | 9. | ஈ) | 10. | அ) |

# 2. குப்தர்கள்

**பேரரசுகளின் காலம் : குப்தர்**
6 ஆம் வகுப்பு - சமூக அறிவியல்

## அறிமுகம்

கி.பி. (பொ.ஆ.) மூன்றாம் நூற்றாண்டின் இறுதியில் வட இந்தியாவில் குஷாணர்களாலும், தெற்கே சாதவாகனர்களாலும் நிறுவப்பட்டிருந்த வலிமை வாய்ந்த பேரரசுகள் பெருமையையும் வலிமையையும் இழந்தன. இச்சூழல் சந்திரகுப்தரை ஒரு அரசை உருவாக்கித் தனது வம்சத்தின் ஆட்சியை நிறுவ வைத்தது. அவ்வாட்சி இருநூறு ஆண்டுக் காலம் நீடித்தது.

## சான்றுகள்

### தொல்லியல் சான்றுகள்

- குப்த அரசர்களால் வெளியிடப்பட்ட தங்க, வெள்ளி, செப்பு நாணயங்கள்
- சமுத்திரகுப்தரின் அலகாபாத் தூண் கல்வெட்டு
- மெக்ராலி இரும்புத்தூண் கல்வெட்டு
- இரண்டாம் சந்திரகுப்தரின் உதயகிரி குகைக் கல்வெட்டு, மதுரா பாறைக் கல்வெட்டு, சாஞ்சி பாறைக் கல்வெட்டு.
- ஸ்கந்த குப்தரின் பிதாரி தூண் கல்வெட்டு
- கத்வா பாறைக் கல்வெட்டு
- மதுபான் செப்புப் பட்டயம் (பஞ்சாப்)
- சோனாபட் செப்புப் பட்டயம்
- நாளந்தா களிமண் முத்திரைப் பொறிப்பு

### இலக்கியச் சான்றுகள்

- விஷ்ணு, மத்சய, வாயு, பாகவத புராணங்கள், நாரதரின் நீதி சாஸ்திரம்.
- விசாகதத்தரின் தேவிச்சந்திர குப்தம், முத்ரா ராக்ஸம், பாணரின் ஹர்ஷ சரிதம்.
- காளிதாசரின் நாடகங்கள்
- இரண்டாம் சந்திரகுப்தரின் காலத்தில் இந்தியாவிற்கு வருகை புரிந்த சீன பௌத்தத்துறவி பாகியானின் பயணக் குறிப்புகள்
- ஹர்ஷரின் ரத்னாவளி, நாகநந்தா, பிரியதர்ஷிகா
- யுவான் சுவாங்கின் சி- யூ-கி

## குப்த அரச வம்சம் நிறுவப்படல்

### ஸ்ரீகுப்தர்

குப்த அரச வம்சத்தை நிறுவியவர் ஸ்ரீகுப்தர் எனக் கருதப்படுகிறார். அவர் தற்போதைய வங்காளம், பீகார் பகுதிகளை ஆண்டதாகக் கருதப்படுகிறது. நாணயங்களில் முதன்முதலாக இடம் பெற்ற குப்த அரசரின் வடிவம் இவருடையதே. இவருக்குப் பின்னர் இவருடைய மகன் கடோத்கஜர் அரசப் பதவியேற்றார். கல்வெட்டுகளில் இவர்கள் இருவருமே 'மகாராஜா' என்றே குறிப்பிடப்பட்டுள்ளனர்.

### முதலாம் சந்திரகுப்தர் (கி.பி. (பொ.ஆ.) 319 - 335)

முதலாம் சந்திரகுப்தர், புகழ்பெற்ற, வலிமை மிகுந்த 'லிச்சாவி' அரச குடும்பத்தைச் சேர்ந்த குமாரதேவியை மணந்தார். இக்குடும்பத்தின் ஆதரவோடு, வட இந்தியச் சிற்றரசுகள் பலவற்றை இவர் வெற்றிகொண்டு, ஒரு பேரரசின் முடியரசராகத் தன்னை முடி சூட்டிக்கொண்டார். சந்திரகுப்தரால் வெளியிடப்பட்டவை எனக் கருதப்படும் தங்க நாணயங்களில் சந்திரகுப்தர், குமாரதேவி ஆகிய இருவரின் உருவங்கள் இடம்பெற்றுள்ளன. 'லிச்சாவையா' என்ற வாசகமும் பொறிக்கப்பட்டுள்ளது.

**லிச்சாவி**

லிச்சாவி பழமையான கன சங்கங்களில் ஒன்றாகும். அதனுடைய ஆட்சிப் பகுதி கங்கை நதிக்கும் நேபாள நாட்டிற்கும் இடைப்பட்டதாக இருந்தது.

முதலாம் சந்திரகுப்தர், கான்ஸ்டாண்டிநோபிள் நகரை உருவாக்கிய ரோமானியப் பேரரசர் கான்ஸ்டன்டைனின் சமகாலத்தவர் ஆவார்.

### சமுத்திரகுப்தர் (கி.பி. (பொ.ஆ.) 335 - 380)

முதலாம் சந்திரகுப்தரின் மகனான சமுத்திரகுப்தர் குப்த அரச வம்சத்தின் தலைசிறந்த அரசர் ஆவார். சமுத்திரகுப்தரின் அவைக்களப் புலவரான 'ஹரிசேனர்' இயற்றிய பிரயாகை மெய்க்கீர்த்தி (பிரசஸ்தி) அலகாபாத் தூணில் பொறிக்கப்பட்டுள்ளது. சமுத்திரகுப்தரின் ஆட்சிக்கான மிக முக்கியச் சான்று அலகாபாத் தூண் கல்வெட்டாகும்.

**பிரசஸ்தி / மெய்க்கீர்த்தி**

- பிரசஸ்தி என்பது ஒரு சமஸ்கிருதச் சொல். அதன் பொருள் ஒருவரைப் பாராட்டிப்

'புகழ்வதாகும்'.

- அவைக்களப் புலவர்கள் அரசர்களைப் புகழ்ந்துபாடி அவர்தம் சாதனைகளைப் பட்டியலிட்டனர்.
- இவை பின்னர் மக்கள் படித்துத் தெரிந்து கொள்வதற்காகத் தூண்களில் பொறிக்கப்பட்டன.

**குப்த அரச வம்சம் ஒருங்கிணைக்கப்படல்**

சமுத்திரகுப்தர் மகத்தான போர்த்தளபதியாவார். அவர் பேரரசர் ஆனவுடன் நாடு முழுவதும் படையெடுத்துச் சென்றார். தென்னிந்தியாவின் மீதும் படையெடுத்தார். தென்னிந்தியாவில் பல்லவநாட்டு அரசர் விஷ்ணுகோபனைச் சமுத்திரகுப்தர் தோற்கடித்தார்.

வட இந்தியாவில் சமுத்திரகுப்தர் ஒன்பது அரசுகளைக் கைப்பற்றினார். தென்னிந்தியாவைச் சேர்ந்த 12 அரசர்களைத் தனக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக்கி அவர்களைக் கப்பம் கட்டச் செய்தார். கிழக்கு வங்காளம், அஸ்ஸாம், நேபாளம், பஞ்சாபின் கிழக்குப் பகுதி ஆகியவற்றின் அரசர்களும் இராஜஸ்தானத்தைச் சேர்ந்த பல்வேறு பழங்குடியினரும் சமுத்திரகுப்தரின் மேலாதிக்கத்தை ஏற்றுக்கொண்டனர்.

சமுத்திரகுப்தர் ஒரு விஷ்ணு பக்தராவார். தனது மேலாதிக்கத்தை நிலைநாட்டும் அரசரால் நடத்தப்படும் வேதகாலச் சடங்கான குதிரைகளைப் பலியிடும் வேள்வியைச் சமுத்திரகுப்தர் மீண்டும் நடைமுறைப்படுத்தினார். அவர் தங்க நாணயங்களை வெளியிட்டார். அவற்றுள் ஒன்றில் அவர் வீணை வாசிப்பது போன்ற உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அவர் மிகச் சிறந்த படையெடுப்பாளர் மட்டுமல்ல; கவிதைப் பிரியரும் இசைப் பிரியருமாவார். அதனால் 'கவிராஜா' எனும் பட்டம் பெற்றார்.

இலங்கையைச் சேர்ந்த ஸ்ரீ மேகவர்மன் எனும் பௌத்த அரசன் சமுத்திரகுப்தரின் சமகாலத்தவராவார்.

**இரண்டாம் சந்திரகுப்தர் (கி.பி. (பொ.ஆ) 380 - 415)**

இரண்டாம் சந்திரகுப்தர் சமுத்திரகுப்தரின் மகனாவார். அவர் 'விக்கிரமாதித்யர்' என்றும் அறியப்பட்டார். அவர் சாக அரசர்களைத் தோற்கடித்து மேற்கு மாளவத்தையும் குஜராத்தையும் கைப்பற்றினார். தென்னிந்திய அரசுகளோடு அவர் நட்புறவைப் பேணினார். குதுப்மினாருக்கு அருகேயுள்ள இரும்புத் தூண் விக்கிரமாதித்யரால் உருவாக்கப்பட்டது என நம்பப்படுகிறது. இவருடைய ஆட்சியின்போது பாகியான் எனும் சீன பௌத்த அறிஞர் இந்தியா வந்தார். மிகச் சிறந்த அறிஞர்களும் புலவர்களும் எழுத்தாளர்களும் கலைஞர்களும் (நவரத்தினங்கள்) இவருடைய அவையை அலங்கரித்ததாகக் கூறப்படுகிறது. அவர்களில் ஒருவர் காளிதாசர் எனக் கூறப்படுகிறது.

**இரண்டாம் சந்திரகுப்தரின் பட்டப் பெயர்கள்:**

- விக்கிரமாதித்தியர்
- நரேந்திர சந்திரர்
- சிம்ம சந்திரர்
- நரேந்திர சிம்மர்
- விக்கிரம தேவராஜர்
- தேவ குப்தர்
- தேவஸ்ரீ

| விக்கிரமாதித்யரின் அவையிலிருந்த நவரத்தினங்கள் | |
|---|---|
| காளிதாசர் | சமஸ்கிருதப் புலவர் |
| ஹரிசேனர் | சமஸ்கிருதப் புலவர் |
| அமர சிம்ஹர் | அகராதியியல் ஆசிரியர் |
| தன்வந்திரி | மருத்துவர் |
| காகபானகர் | சோதிடர் |
| சன்கு | கட்டடக் கலை நிபுணர் |
| வராகமிகிரர் | வானியல் அறிஞர் |
| வராச்சி | இலக்கண ஆசிரியர் மற்றும் சமஸ்கிருதப் புலவர் |
| விட்டல்பட்டர் | மாயவித்தைக்காரர் (Magician) |

**முதலாம் குமாரகுப்தர்**

இரண்டாம் சந்திரகுப்தரைத் தொடர்ந்து அவருடைய மகன் முதலாம் குமாரகுப்தர் அரியணை ஏறினார். அவரே நாளந்தா பல்கலைக் கழகத்தை உருவாக்கியவர்.

**ஸ்கந்தகுப்தர்**

குமாரகுப்தரைத் தொடர்ந்து அரசப் பதவியேற்ற ஸ்கந்தகுப்தர் ஹூணர்களின் படையெடுப்பைச் சந்திக்க நேரிட்டது. அவர் அவர்களைத் தோற்கடித்து விரட்டி அடித்தார். ஆனால் பன்னிரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் மீண்டும் படையெடுத்து வந்த ஹூணர்கள் குப்தப் பேரரசை தோற்கடித்தனர்.

**முதலாம் நரசிம்மகுப்தர்**

மிகச் சிறந்த குப்தப் பேரரசர்களில் கடைசிப் பேரரசரான பாலாதித்யர் முதலாம் நரசிம்மகுப்தர் என்ற பெயரில் அரியணை ஏறினார். இவர் பௌத்த மதத்தால் ஈர்க்கப்பட்டவராவார். இவர் மிகிரகுலருக்கு கப்பம் கட்டிவந்தார். ஆனால் மிகிரகுலர் பௌத்தத்தைப் பகைமையோடு பார்த்ததால் மனவேதனை அடைந்து கப்பம் கட்டுவதை நிறுத்தினார். மிகிரகுலரைக் கைது செய்து சிறையில் அடைப்பதில் பாலாதித்யர் வெற்றி பெற்றாலும் மிகிரகுலர் வஞ்சகமாகப் பாலாதித்யரை மகதத்திலிருந்து வெளியேற்றினார். பாலாதித்யருக்குப் பின்னர் மாபெரும் குப்தப் பேரரசு தேய்ந்து காணாமற் போனது.

**கலையும் கட்டடக்கலையும்**

**கட்டடக்கலை**

கட்டுமானக் கோவில்களை முதன்முதலாகக் கட்டியவர்கள் குப்தர்களே. இது முன்பிருந்த மரபான, பாறைக் குடைவரைக் கோவில்களின் அடுத்த கட்டப் பரிணாம வளர்ச்சியாகும். கோபுரங்களோடும் விரிவான செதுக்கு வேலைப்பாடுகளோடும் அனைத்து இந்து தெய்வங்களுக்கும் இக்கோவில்கள் கட்டப்பட்டன. மிகவும் குறிப்பிடத்தக்க பாறைக் குடைவரைக் குகைகள் அஜந்தா, எல்லோரா (மகாராஷ்டிரா), பாக் (மத்தியப் பிரதேசம்), உதயகிரி (ஒடிசா) ஆகிய இடங்களில் காணப்படுகின்றன. இக்காலப் பகுதியில் கட்டப்பட்ட கட்டுமானக் கோவில்கள், திராவிட பாணிக் கூறுகளை ஒத்திருக்கின்றன.

**சிற்பக்கலை**

குப்தர்களின் உலோகச் சிற்பத்திற்கு இரு சிறந்த எடுத்துக்காட்டுகள்: நாளந்தாவிலுள்ள 18 அடி உயரமுள்ள புத்தரின் செப்புச் சிலை, சுல்தான் கஞ்ச் என்னும் இடத்திலுள்ள ஏழரை அடி உயரமுள்ள புத்தரின் உலோகச் சிற்பம்.

**ஓவியக்கலை**

குப்தர்களின் ஓவியக் கலைக்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்பவை அஜந்தா குகை ஓவியங்களும், குவாலியர் பாக் குகையில் காணப்படும் ஓவியங்களும் ஆகும்.

**இலக்கியம்**

பிராகிருதம் மக்களால் பேசப்படும் மொழியாக இருந்தபோதிலும் குப்தர்கள் சமஸ்கிருதத்தை அலுவலக மொழியாகக் கொண்டிருந்தனர். அவர்களின் கல்வெட்டுகள், அனைத்தும் சமஸ்கிருத மொழியிலேயே உள்ளன. குப்தர்கள் காலத்தில் சமஸ்கிருத இலக்கணமும் வளர்ச்சி பெற்றது. அது பாணினி எழுதிய 'அஷ்டதியாயி', பதஞ்சலி எழுதிய 'மகா பாஷ்யம்' எனும் நூல்களை அடிப்படையாகக் கொண்டது.

வங்காளத்தைச் சேர்ந்த சந்திரோகோமியா எனும் பௌத்த அறிஞர் 'சந்திர வியாகரணம்' என்ற இலக்கண நூலை எழுதினார். காளிதாசர் இயற்றிய நாடக நூல்கள், சாகுந்தலம், மாளவிகாக்னிமித்ரம், விக்கிரம ஊர்வசியம் என்பனவாகும். அவருடைய ஏனைய சிறப்புமிக்க நூல்கள் மேகதூதம், ரகுவம்சம், குமாரசம்பவம், ரிதுசம்காரம் ஆகியனவாகும்.

**கணிதம், வானியல் மற்றும் மருத்துவம்**

- பூஜ்ஜியத்தின் கண்டுபிடிப்பும், அதன் பரிணாம வளர்ச்சியாகத் தசம எண் முறையும் குப்தர்கள் நவீன உலகிற்கு விட்டுச்சென்றுள்ள மரபுவழிச் சொத்தாகும்.
- ஆரியபட்டர், வராகமிகிரர், பிரம்ம குப்தர் ஆகியோர் அக்காலப் பகுதியைச் சேர்ந்த மிக முக்கிய கணிதவியல், வானியல் அறிஞர்கள் ஆவர்.

**ஆரியபட்டர்**

- ஆரியபட்டர் தனது நூலான 'சூரிய சித்தாந்தா'வில் சூரிய, சந்திர கிரகணங்களுக்கான உண்மைக் காரணங்களை விளக்கியுள்ளார்.
- பூமி தனது அச்சில் சுழல்கிறது எனும் உண்மையை அறிவித்த முதல் இந்திய வானியல் ஆய்வாளர் அவரேயாவார்.

**தன்வந்திரி**

- மருத்துவத் துறையில் புகழ் பெற்ற அறிஞர் தன்வந்திரி ஆவார்.
- அவர் ஆயுர்வேத மருத்துவத்தில் நிபுணராகத் திகழ்ந்தார்.

**சாரக்கர்**

- சாரக்கர் ஒரு மருத்துவ அறிவியல் அறிஞராவார்.

**சுஸ்ருதர்**

- சுஸ்ருதர் அறுவைச் சிகிச்சை செய்முறையைப் பற்றி விளக்கிய முதல் இந்தியர் ஆவார்.

## குப்தர்

11 ஆம் வகுப்பு - வரலாறு

## அறிமுகம்

ஏறத்தாழ பொ.ஆ. 300 முதல் 700 வரையிலான காலகட்டம் அரசு அமைப்பில் ஒரு செவ்வியல் முறை தோன்றி பல பகுதிகளில் பேரரசர் ஆட்சி உருவாக வழிவகுத்த காலமாக இருந்தது. மௌரியப் பேரரசிற்குப் பின்னர், பல சிறு அரசுகள் தோன்றியவாறும் வீழ்ந்தவாறும் இருந்தன. குப்தர் அரசுதான் ஒரு பெரும் சக்தியாக உருவாகி, துணைக்கண்டத்தின் பெரிய பகுதியை அரசியல்ரீதியாக ஒன்றிணைத்தது. மத்தியில் ஒரு வலுவான அரசாக வலுப்பெற்றதால், பல அரசுகள் அதன் ஆதிக்கத்தின் கீழ் இருந்தன. இக்காலகட்டத்தில் நிலப்பிரபுத்துவம் ஒரு நிறுவனமாக வேரூன்றத் தொடங்கியது. செயல்திறன்மிக்க வணிகக் குழு முறை, கடல்கடந்த வாணிபம் ஆகியவற்றுடன் அதன் பொருளாதாரம் எழுச்சி கண்டது. இக்காலகட்டத்தில் சமஸ்கிருதத்தில் பல பெரிய படைப்புகள் தோன்றின. நுண்கலை, சிற்பம், கட்டிடக்கலை ஆகியவற்றில் பண்பாட்டு முதிர்ச்சி காணப்பட்டது.

உயர் வர்க்கத்தினரின் வாழ்க்கை முறை உச்சத்தில் இருந்தது. கல்வி, கலை, அறிவியல் ஆகியவை சிறந்தோங்கி இருந்தாலும்கூட, இக்காலகட்ட ஆட்சியின் நிலப்பிரபுத்துவ குணம்

காரணமாக மக்கள் துன்புற்றார்கள். 'குப்தர் காலம் பொற்காலம்' என்று சொல்லப்படுவது ஏகாதிபத்திய வரலாற்றாளர்களின் கருத்துகளுக்கான தேசிய வரலாற்றாளர்களின் எதிர்வினை என்பதாகவே புரிந்து கொள்ளப்பட வேண்டும். எனினும், இக்காலகட்டம் பண்பாட்டு மலர்ச்சியின் காலம், செவ்வியல் கலைகளின் காலம் என்பதைப் பல அறிஞர்களும் ஏற்கவே செய்கிறார்கள்.

## வரலாற்றுச் சான்றுகள்

குப்தர் காலத்து வரலாற்றை மீள் உருவாக்கம் செய்ய மூன்று வகையான சான்றுகள் உள்ளன.

**1. இலக்கியச் சான்றுகள்**

- நாரதர், விஷ்ணு, பிருகஸ்பதி, காத்யாயனர் ஸ்மிருதிகள்
- அரசருக்குக் கூறுவது போன்று எழுதப்பட்டுள்ள காமந்தகாரின் நீதிசாரம் என்ற தரும சாத்திரம் (பொ.ஆ. 400)
- விசாகதத்தரின் தேவிசந்திரகுப்தம், முத்ராராட்சசம் ஆகியவை குப்தரின் எழுச்சி குறித்த விவரங்களை அளிக்கின்றன.
- புத்த, சமண இலக்கியங்கள்
- காளிதாசர் படைப்புகள்
- இரண்டாம் சந்திரகுப்தர் காலத்தில் இந்தியாவிற்கு வருகை தந்த சீனப் பயணி பாஹியான் குறிப்புகள்.

**2. கல்வெட்டுச் சான்றுகள்**

- மெஹ்ரோலி இரும்புத் தூண் கல்வெட்டு - முதலாம் சந்திரகுப்தரின் சாதனைகளை குறிக்கிறது.
- அலகாபாத் தூண் கல்வெட்டு: சமுத்திரகுப்தரின் ஆட்சி, அவரது ஆளுமை, சாதனைகள் ஆகியவற்றை இது விளக்குகிறது. இதனைப் பொறித்தவர் ஹரிசேனர். இது 33 வரிகளில் நாகரி வரிவடிவத்தில் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்டுள்ளது.

**3. நாணய ஆதாரங்கள்**

- குப்த அரசர்கள் வெளியிட்ட நாணயங்களில் உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. இந்தத் தங்க நாணயங்கள் குப்த அரசர்களின் பட்டங்கள் குறித்தும் அவர்கள் நடத்திய சடங்குகள் குறித்தும் தெரிவிக்கின்றன.

## குப்தர் வம்சத்தின் தோற்றம்

குப்தர் வம்சத்தின் தோற்றம் குறித்த சான்றுகள் மிகவும் குறைவுதான். குப்த அரசர்கள் எளிய குடும்பத்திலிருந்து தான் உருவாகியிருக்க வேண்டும். குப்த வம்சத்தின் மூன்றாவது ஆட்சியாளரான முதலாம் சந்திர குப்தர் குமாரதேவி என்ற லிச்சாவி இளவரசியை மணந்தார். இத்தகவலை அவரது பரம்பரையினர் மிகவும் பெருமையோடு பதிவு செய்திருப்பது இந்த அரச குடும்பத்துடனான தொடர்பு குப்தர்களின் எழுச்சிக்குக் காரணமாக இருக்கலாம் என்பதைக் காட்டுகிறது. லிச்சாவி என்பது வடக்கு பிகாரில் இருந்த பழமையான கணசங்கமாகும். அது கங்கைக்கும் நேபாள தெராய்க்கும் இடைப்பட்ட பகுதியாகும். சந்திர குப்தரின் ஒப்பற்ற புதல்வரான சமுத்திரகுப்தரின் பிரயாகை (இன்றைய அலகாபாத்) தூண் கல்வெட்டின்படி, அவர் பிரயாகைக்கு மேற்கே மதுரா வரையுள்ள செழிப்பான நிலங்கள் முழுவதையும் கைப்பற்றினார். கலிங்கம் வழியாகத் தெற்கே, பல்லவர்களின் தலைநகரமான காஞ்சிபுரம் வரை வெற்றிகரமான படையெடுப்பை நடத்தினார். மகதம், அலகாபாத், அவுத் ஆகியவற்றை குப்தர்களின் பகுதிகளாகப் புராணங்கள் குறிப்பிடுகின்றன.

## முதலாம் சந்திரகுப்தரும், பேரரசு உருவாகுதலும்

குப்த வம்சத்தின் முதல் அரசர் ஸ்ரீகுப்தர் (பொ.ஆ. 240-280). இவரைத் தொடர்ந்து இவரது புதல்வர் கடோத்கஜர் (பொ.ஆ. 280-319) ஆட்சிக்கு வந்தார். கல்வெட்டுகளில் ஸ்ரீகுப்தர், கடோத்கஜர் ஆகிய இருவரும் மகாராஜா என்று குறிக்கப்படுகிறார்கள். கடோத்கஜரின் புதல்வரான முதலாம் சந்திரகுப்தர் பொ.ஆ. 319 முதல் 335 வரை ஆட்சிபுரிந்தார். இவர் குப்தப் பேரரசின் முதல் பேரரசராகக் கருதப்படுகிறார். சந்திரகுப்தர் மகாராஜா - அதிராஜா என்ற பட்டத்தை ஏற்றார். மற்றவர்களின் ஆவணங்களிலிருந்து இவரது பேரரசர் நிலை நமக்குப் புலப்படுகிறது. இவரது ஆட்சிக் காலத்தின் கல்வெட்டோ, நாணயமோ நமக்குக் கிடைக்கவில்லை.

### சமுத்திரகுப்தர்

பொ.ஆ. 335 இல் முதலாம் சந்திரகுப்தர் தனது புதல்வர் சமுத்திரகுப்தரைத் தனது வாரிசாக நியமித்தார். அசோகர் தூண் ஒன்றில் பொறிக்கப்பட்ட இவர் குறித்த நீண்ட புகழுரை அவர் மௌரிய பரம்பரையில் வந்ததாகச் சொல்கிறது. இந்தக் கல்வெட்டு சமுத்திரகுப்தர் நாடு முழுவதும் படையெடுத்துச் சென்றபோது அவருக்கு அடிபணிந்த அரசர்கள், ஆட்சிப் பகுதிகள் ஆகியன குறித்த மிகப் பெரும் பட்டியலைத் தருகிறது.

முக்கியமாக தில்லி மற்றும் மேற்கு உத்தரப்பிரதேசத்தின் நான்கு அரசர்களையும் அவர் வென்றுள்ளார். தெற்கு மற்றும் கிழக்குப் பகுதி அரசர்கள் அடிபணிந்து கப்பம் செலுத்தக் கட்டாயப்படுத்தப்பட்டனர். கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ள இடங்களைப் பார்க்கும்போது, சமுத்திரகுப்தரின் படையெடுப்பு கிழக்குக் கடற்கரையோரம் காஞ்சிபுரம் வரை நீண்டதாகத் தெரிகிறது. கங்கைச் சமவெளியின் மேற்குப் பகுதியில் ஒன்பது அரசர்களைப் படைபலத்தால் வென்றார். காட்டு ராஜாக்களும் (மத்திய இந்தியா மற்றும் தக்காணத்தின் பழங்குடியினத் தலைவர்கள்), அஸ்ஸாம், வங்கம் போன்ற கிழக்குப் பகுதிகளின் அரசர்களும், நேபாளம், பஞ்சாப் போன்ற பகுதிகளின் சிற்றரசர்களும் கப்பம் கட்டக் கட்டாயப்படுத்தப்பட்டனர். மாளவர்கள், யுதேயர்கள்

# இந்தியப் பண்பாட்டிற்குப் பேரரசுகளின் கொடை

12 ஆம் வகுப்பு - அறவியலும் இந்தியப் பண்பாடும்

## குப்தர்கால பண்பாடு

கி.பி. (பொ.ஆ.) 3-ஆம் நூற்றாண்டின் இறுதியில் குப்தப்பேரரசு ஸ்ரீகுப்தர் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. முதலாம் சந்திரகுப்தர், முதலாம் சமுத்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர், முதலாம் குமாரகுப்தர் போன்றோர்கள் இப்பேரரசின் சிறந்த மன்னர்களாகத் திகழ்ந்தனர். இந்தியப்பண்பாட்டிற்குக் குப்தர்கள் பல வகையிலும் உதவினர். ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய, நுண்கலைகள், இலக்கியங்கள், அறிவியல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு வகையான பண்பாட்டுக் கூறுகளில் தங்களின் முத்திரையைப் பதித்துள்ளனர்.

### சான்றுகள்

விசாகதத்தர், காளிதாசர் ஆகியோரின் இலக்கியங்களும், அலகாபாத் கற்றூண் கல்வெட்டு, மெஹ்ரோலி இரும்புத்தூண் போன்றவை சீனப்பயணி பாஹியானின் 'போகோகி' எனப்பட்ட பயணக்குறிப்புகளும், நாணயங்கள் மற்றும் வரலாற்றுச்சின்னங்களும் குப்தர்களைப் பற்றிஅறிவதற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன.

### பாஹியானின் குறிப்புகள்

இந்தியாவிற்கு வந்த முதல் சீனப்பயணி பாஹியான் ஆவார். இவர் பெஷாவர், காசி, கயா உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். இவர் இந்தியாவில் 9 ஆண்டுகள் தங்கியிருந்தார். பாடலிபுத்திரத்தில் 3 ஆண்டுகளிருந்து சமஸ்கிருத மொழியையும், பௌத்த இலக்கியங்களையும் கற்றார். இவருடைய குறிப்புகள் இரண்டாம் சந்திரகுப்தரின் கால அரசியல், சமூக, பொருளாதார சமய நிலைகளைப் பற்றிக் கூறுகின்றன.

### ஆட்சிமுறை

குப்தப் பேரரசர்கள் பரம பட்டாரகா, பரமேஸ்வரா, மகாராஜாதிராஜா, சாம்ராட் போன்ற விருதுப் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். பேரரசருக்குக் கீழ் முதலமைச்சர், படைத்தலைவர் உள்ளடக்கிய அமைச்சரவையும் இருந்தது. இந்த அமைச்சர்கள் அரசனுக்கு ஆலோசனை வழங்கினர். குப்தர் காலத்தில் குமாரமாத்யர்கள் என்ற வருவாய்த்துறை உயரதிகாரிகள் பற்றியும் மகாசந்திவிக்ரஹா என்ற வெளியுறவுத் துறை அமைச்சர் பற்றியும் குப்தர் காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நீதித்துறை மற்றும் ராணுவத்துறையில் பொறுப்பு வகித்த அமைச்சர்களை முறையே தண்டநாயகர், மகாதண்டநாயகர் என்ற பெயர்களால் குறிப்பிட்டதை அலகாபாத் கற்றூண் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. குப்தர்கள்கால குதிரைப்படைத் தலைவர், மகாஅஸ்வபதி என்றழைக்கப்பட்டார்.

### அலகாபாத் கற்றூண் கல்வெட்டு

இக்கல்வெட்டு அரிசேனர் என்பவரால் 33 வரிகளில் பொறிக்கப்பட்டது. இதில் முதலாம் சமுத்திரகுப்தரின் போர் வெற்றிகள், படைத்திறன் ஆகியவை பற்றியும், குப்த பேரரசின் ஆட்சி எல்லைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

### குப்தர்களின் ஆட்சிப் பிரிவுகள்

குப்தர்களின் பேரரசு தேசம் அல்லது புக்தி என்ற பெயர்களைக் கொண்ட மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இம்மாநிலங்களை உபாரிகா என்ற ஆளுநர்கள் ஆட்சி செய்தனர். இவர்கள் பேரரசரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உபாரிகா மற்ற அதிகாரிகளை நியமித்தார். உபாரிகா மாநில நிருவாகத்துடன் யானைப்படை, குதிரைப்படை வீரர்களையும் படைத்துறை நிருவாகத்தை மாநில அளவில் நிருவகித்தார். லோகபாலா என்ற அலுவலரைப் பற்றி ஈரன் என்ற கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகிறது. மாநிலங்கள் விஷயம் என்ற மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. இவற்றை ஆட்சி செய்தவர்கள் விஷயபதிகள் எனப்பட்டனர். இவர்கள் மாநில ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.

மாவட்டங்கள் பூமி, பதாகா, பீடா போன்ற பல்வேறு வித ஆட்சிப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இவற்றை ஆயுக்தகா, மகதரா போன்ற அதிகாரிகள் ஆட்சி செய்தனர். மகதராவின் கீழ் எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழு செயல்பட்டது. இரண்டாம் சந்திர குப்தர் காலத்தில் பஞ்ச மண்டலி என்ற குழுமத்தைப் பற்றிய குறிப்புகள் சாஞ்சிக் கல்வெட்டில் காணப்படுகின்றன. மாவட்ட அளவிலிருந்து, ஆலோசனைக் குழு விஷயபதிகளுக்கு நிருவாக முறையில் ஆலோசனை கூறியது. இக்குழுவிற்கு அத்யக்ஷா என்று பெயர். கிராமப் பஞ்சாயத்துகளும் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தன. வங்காளம், பீகார், உத்திரப்பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள், மன்னரின் நேரடி நிருவாகத்தின் கீழ் செயல்பட்டன. குப்தர்கள் ஆட்சி முறை வாகாடகர்கள், காலச்சூரிகள், சாளுக்கியர்கள், ராஷ்டிரகூடர்கள் போன்றோருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது எனலாம். குப்தப்பேரரசின் பல்வேறு நிருவாக முறைகளை இவர்கள் பின்பற்றினர்.

### படை நிருவாகம்

குப்தர்கள் காலத்தில் காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை ஆகிய படைகள் இருந்தன. மன்னரால் சிறப்பாக வழி நடத்தப்பட்ட இப்படை நிருவாகம் குப்தர்களின் வெற்றிக்குக் காரணமாகத் திகழ்ந்தது. காலாட்படையின் தலைவர் பாலாதிகிருதியா என்றழைக்கப்பட்டார். குதிரைப்படைத் தலைவர்

சேனாதிபதி என்றழைக்கப்பட்டார். இராணுவக் கிடங்குகளின் தலைமை அலுவலகம் ரணபந்தகா எனப்பட்டது.

மகாபிரதிஹாரா என்ற அரண்மனைக் காவலர்களும், கத்யதபகிதா என்ற அரச சமையலறைக் கண்காணிப்பாளரும் முக்கிய இடம் பெற்றனர். அமாத்யா, சச்சிவா போன்ற அலுவலர்கள் நிருவாக அதிகாரிகளாகப் பணியாற்றினர். ஒற்றர்களைக் கொண்ட உளவு அமைப்பு துடாகா என்றழைக்கப்பட்டது.

**சமூக நிலை**

குப்தர்கால சமூகநிலை சிறந்து விளங்கியது. குடும்பங்கள் கூட்டுக் குடும்பமாக இருந்தன. வர்ணாஸ்ரமமுறை அடிப்படையிலான குப்தர்கள்கால சமூகத்தில், பல்வேறு தொழிற்பிரிவு மக்களும் வாழ்ந்தனர். உயர்குடியினர்கள் சமூகத்தில் அனைத்து உரிமைகளையும் பெற்றிருந்தனர். பெண்கள் உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கப்பட்டனர், இவர்கள் கல்வியறிவு பெற்றுச் சமூகத்தில் சிறந்து விளங்கினர். ஆச்சார்யா எனப்பட்ட ஆசிரியர்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த மதிப்பிருந்தது. பெண்கள் காதணிகள், கழுத்தணிகள், வளையல்கள் போன்றவற்றை அணிந்தனர். தங்கம், வெள்ளி போன்றவற்றினாலான ஆபரணங்களுக்கும் மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. போர்க்கைதிகள், கடனாளிகள், சூதாட்டத்தில் தோற்றவர்கள் அடிமைப்படுத்தப்பட்டனர்.

**குப்தர்கள் கால பொருளாதார நிலை**

குப்தர்கள் காலத்தில் வேளாண்மையே முக்கிய தொழிலாக விளங்கியது. நெல், கோதுமை, பார்லி போன்ற தானியங்கள் பயிரிடப்பட்டன. விளைச்சல் மற்றும் நிலத்தின் தன்மை அடிப்படையில் நிலம் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டது. நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. ஜலநிர்கமா என்ற வடிகால்கள் மூலம் நீர்ப் பாசனப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. சுதர்சன ஏரி குப்தர்கள் கால நீர்ப்பாசனத்தில் முக்கிய இடம் பிடித்தது. விளைச்சலில் ஆறில் ஒருபங்கு மக்களிடமிருந்து வரியாகப் பெறப்பட்டது. அவ்வரி பாகா எனப்பட்டது. கரா என்ற வரி, கிராமங்களில் வாழ்வோர் மீது விதிக்கப்பட்டது. ஹிரண்யா என்ற வரி, தங்க நாணயங்கள் வைத்திருப்போர் செலுத்தும் வரியாகும். குப்தர்கள் காலத்தில் சிறந்து விளங்கிய உலோகத் தொழில், சுரங்கத் தொழில் பற்றிய செய்திகளை வராகமிகிரர், காளிதாசர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். இக்காலத்தில் பீகாரிலிருந்து இரும்புப் படிவுகளும் ராஜஸ்தானிலிருந்து செம்புப் படிவுகளும் கண்டறியப்பட்டன.

வணிகர்களுக்குள் வணிக், சிரேஷ்டி, சார்த்தவஹா என்ற மூன்று பிரிவினர் இருந்தனர். சார்த்தவாஹா இலாபம் வேண்டி ஊரெங்கும் வாணிகம் செய்தனர். வணிக், சிரேஷ்டி என்போர் உள்ளூர் வணிகர்களாவர்.

உஜ்ஜயினி, கயா, காசி, வைசாலி, பிரயாகை (அலகாபாத்) மதுரா ஆகிய இடங்கள் குப்தர்கள் கால முக்கிய வணிக மையங்களாகத் திகழ்ந்தன. கங்கை, கிருஷ்ணா, காவிரி, பிரம்மபுத்திரா ஆகிய நதிகள் உள்நாட்டு நீர்வழி வாணிகத்திற்குப் பயன்பட்டன. கல்யாண், புரோச், காம்பே, தாமிரலிப்தி ஆகிய துறைமுகப் பகுதிகளிலிருந்து அரேபியா, பாரசீகம் போன்ற நாடுகளோடு அயல்நாட்டு வாணிபம் நடைபெற்றது.

**சமய நிலை**

குப்தர்கள் காலத்தில் இந்து சமயம் முழுமையடைந்தது. சமண பௌத்த சமயங்களும் மக்களால் பின்பற்றப்பட்டன. தசாவதாரக் கதைகள் போன்றவற்றைக் கேட்டறிந்த மக்களுக்கு, இந்து சமயத்தின் மீது மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை கதைகளாகக் கூறப்பட்டன.

கங்கைச்சமவெளிப் பகுதிகளைப் பாஹியான் என்ற சீனப்பயணி, 'பிராமணர்களின் பூமி' என்று குறிப்பிட்டுள்ளனர். குப்த மன்னர்கள் பெரும்பான்மை இந்துவாக இருந்தாலும் சமய சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்தனர்.

இந்து சமயத்தில் புதிய ஆன்மீக நம்பிக்கைகள் குப்தர்கள் காலத்தில் தோன்றின. மகாவிஷ்ணுவின் வாகனமாகக் கருடனையும் வணங்கினர். பாகவதம் என்ற பெயரில் மஹாவிஷ்ணு வழிபாடும் லட்சுமி வழிபாடும் புதிய சமயச் சடங்குகளுடன் வட இந்தியா முழுவதும் பரவின.

மஹாவிஷ்ணுவின் தசாவதாரக் கருத்துகள், மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தன. மேலும், இராமாயணத்தின் நாயகனான 'இராமனை' மக்கள் கடவுளாக வழிபட்டனர். சிவ வழிபாடும் மக்களால் பின்பற்றப்பட்டது. வாகாடக, கடம்ப வம்ச மன்னர்கள் சிவ வழிபாட்டைப் பெரிதும் பின்பற்றினர். பாசுபதம் என்ற சிவ வழிபாட்டுப் பிரிவு வட இந்தியாவில் பரவியது. பிரம்மன், சூரியன், கார்த்திகேயன், கணேசன், துர்க்கை, சரஸ்வதி போன்ற கடவுளரும் மக்களால் வழிபடப்பட்டனர். பசு, பாம்பு (நாகவழிபாடு) போன்ற விலங்குகளையும் மக்கள் வழிபட்டனர். கங்கை, யமுனை போன்ற நதிகளையும் புனிதமாகக் கருதி வழிபட்டனர். பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்தி வழிபாடும், இந்திரன், வருணன், எமன் போன்ற கடவுளர் வழிபாடும் சிறப்புப்பெற்றிருந்தன. காசி, பிரயாகை போன்ற இடங்கள் புண்ணியத் தலங்களாகக் கருதப்பட்டன. புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்லும் வழக்கம், மக்களிடையே பரவலாக இருந்தது.

# 1. இந்திய அரசியலமைப்பு

**இந்திய அரசியலமைப்புச் சட்டம்**
6 ஆம் வகுப்பு - சமூக அறிவியல் (குடிமையியல்)
(பருவம் - 2)

## அரசியலமைப்புச் சட்டம்

பல இனங்கள், பண்பாடுகளைச் சேர்ந்த மக்கள் வாழும் ஒரு நாட்டில் அனைவரையும் சமத்துவமாக நிர்வகிப்பதற்கு வலுவான, தெளிவான சட்டங்களும் வழிமுறைகளும் தேவை. அதைத்தான் **அரசியலமைப்புச் சட்டம்** என்கிறோம்.

நமது அரசியலமைப்புச் சட்டம் 1950-**ஆம் ஆண்டு ஜனவரி மாதம்** 26-ஆம் நாள் நடைமுறைக்கு வந்தது. அதைத்தான் நாம் **குடியரசு தினமாகக்** கொண்டாடுகிறோம். ஆனால், அந்த நாளில் நம்முடைய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததற்கு வேறு பல காரணங்கள் உண்டு. முக்கியமாக 1929 **ஆம் ஆண்டு லாகூரில்** கூடிய காங்கிரஸ் மாநாட்டில் **முழு சுயராஜ்யத்தை (பூரண சுயராஜ்)** அடைவது என்ற முழக்கம் வலுப்பெற்றது. அதனைத் தொடர்ந்து 1930, **ஜனவரி** 26 அன்று **முழு சுதந்திர நாளாகக்** கொண்டாடப்பட்டது. பின்னாளில் அதுவே நமது குடியரசு தினமாக ஆனது.

அரசியலமைப்புச் சட்டம் ஒரு நாட்டிற்குத் தேவையான சில அடிப்படை விதிகள், கொள்கைகளை உருவாக்கி ஆவணப்படுத்துவதோடு, தனது குடிமக்களின் உரிமைகள், கடமைகள் மற்றும் செயல்பாடுகளை வரையறுக்கிறது. பிறகு அச்சட்டத்தின் துணையோடுதான் அந்நாடு ஆளப்படும்.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் இடம்பெற்றுள்ளவை:

இந்திய அரசியலமைப்புச் சட்டம்தான் நமது நாட்டின் உயர்ந்தபட்ச சட்டமாக விளங்குகிறது. அது அடிப்படை அரசியல் கொள்கைகளை வரையறுப்பது, கட்டமைப்புகள், வழிமுறைகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குவது, அரசு நிறுவனங்களின் கடமைகளைப் பட்டியலிடுவது, குடிமக்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளை நிர்ணயம் செய்வது, வழிகாட்டு நெறிமுறைகளை வழங்குவது ஆகியவற்றின் வழியே ஓர் ஒட்டுமொத்தக் கட்டமைப்பை நமக்குத் தருகிறது.

## இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கம்

அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கும் நோக்கில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 389 **உறுப்பினர்**களைக் கொண்ட **இந்திய அரசமைப்பு நிர்ணய மன்றம்** என்ற அமைப்பு 1946 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இதன் தலைவராக **முனைவர் ராஜேந்திரபிரசாத்** தேர்ந்தெடுக்கப்பட்டார்.

### முக்கிய உறுப்பினர்கள்

ஜவஹர்லால் நேரு, சர்தார் வல்லபாய் பட்டேல், மௌலானா அபுல்கலாம் ஆசாத், எஸ்.இராதாகிருஷ்ணன், விஜயலட்சுமி பண்டிட், சரோஜினி நாயுடு உட்படப் பலர் இந்த அமைப்பில் இடம் பெற்றிருந்தனர். 15 **பெண் உறுப்பினர்கள்** அரசியலமைப்பு நிர்ணய மன்றத்தில் இடம்பெற்றிருந்தனர்.

### வரைவுக்குழு

**ஏழு பேர்** கொண்ட அரசியலமைப்புச் சட்ட **வரைவுக் குழு** உருவாக்கப்பட்டு அதன் **தலைவராக அம்பேத்கர்** தேர்ந்தெடுக்கப்பட்டார். மேலும் இதற்கான **ஆலோசகராக பி.என்.ராவ்** நியமிக்கப்பட்டார். இக்குழுவின் **முதல் கூட்டம்** 1946 **ஆம் ஆண்டு டிசம்பர்** 9 ஆம் தேதி நடைபெற்றது. அன்றே அரசியலமைப்புச் சட்டத்தை எழுதும் வேலைகள் தொடங்கிவிட்டன.

அண்ணல் அம்பேத்கர் **'இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் தந்தை'** என அழைக்கப்படுகிறார்.

அரசியலமைப்புச் சட்ட வரைவுக்குழுவினர் இங்கிலாந்து, அமெரிக்கா, அன்றைய சோவியத் ரஷ்யா, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து உட்பட 60 **நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களை** வாசித்து, அவற்றில் இருந்த சிறப்பான பகுதிகளை முன்மாதிரியாகக் கொண்டு நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்கினர்.

அரசியலமைப்புச் சட்டம் இறுதி செய்யப்படுவதற்கு முன்னர் **சுமார் இரண்டாயிரம் திருத்தங்கள்** அதில் மேற்கொள்ளப்பட்டன.

**2 ஆண்டுகள் 11 மாதங்கள் 18 நாட்கள்** கடந்த நிலையில், **1949 ஆம் ஆண்டு நவம்பர் 26** ஆம் நாள் **முழுமையான அரசியலமைப்புச் சட்டம்** தயாரானது. இந்திய அரசியலமைப்பு நிர்ணய மன்றம் நமது அரசியலமைப்புச் சட்டத்தை அன்றுதான் ஏற்றுக்கொண்டது. ஆகையினால் தான் அந்த நாளை **அரசியலமைப்புச் சட்ட நாளாக (நவம்பர் 26)** ஆண்டுதோறும் நாம் கொண்டாடுகிறோம்.

நமது அரசியலமைப்புச் சட்டத்தை உருவாக்க **64 லட்சம் ரூபாய்** செலவிடப்பட்டது.

**அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கம்**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரை ஒவ்வோர் இந்தியருக்குமான நீதி, சுதந்திரம், சமத்துவத்தை உறுதி செய்வதோடு சகோதரத்துவத்தையும் வலியுறுத்துகிறது.

**முகப்புரை**

அரசியலமைப்புச் சட்டத்தின் முன்னுரைதான் முகப்புரை என்று அழைக்கப்படுகிறது. அது இந்தியாவை **இறையாண்மை, சமத்துவம், மதச்சார்பின்மை, மக்களாட்சிக் குடியரசு** என்று வரையறை செய்கிறது.

**இறையாண்மை**

அரசியலமைப்புச் சட்டம் இந்திய மக்களுக்கு முழு அதிகாரத்தை வழங்கியுள்ளது. நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அவர்களிடம் நிறைவேற்றும் அதிகாரம் இருக்கிறது. இப்படியாக **ஒரு நாட்டின் உச்சநிலை அதிகாரத்தையே இறையாண்மை என்கிறோம்.**

**மதச்சார்பின்மை**

மதச்சார்பின்மை என்பது மக்கள் தங்கள் விருப்பப்படி வெவ்வேறு இறை, மத நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க அனுமதிக்கும் சட்டம், அவர்களுக்கு ஒரே விதமான பாகுபாடற்ற உரிமைகளை வழங்குகிறது. அரசிற்கான மதம் என்று ஒன்று கிடையாது என்பதால் அரசு அனைத்து மதங்களையும் ஒரே தளத்தில் வைத்தே பார்க்கிறது.

**சட்டமன்ற ஆட்சிமுறை**

இந்திய அரசியலமைப்புச் சட்டமானது மாநில மற்றும் ஒன்றிய அரசுகள் சட்டமன்ற ஆட்சிமுறையைப் பின்பற்றி ஆட்சி செய்ய வழிவகை செய்துள்ளது. இந்த அமைப்பின்படி, நிறைவேற்று அதிகாரம் சட்டமன்றத்தின் (நாடாளுமன்றத்தின்) கூட்டுப்பொறுப்பாக இருக்கும். அதிக உறுப்பினர்களைக் கொண்ட கட்சி ஆட்சியமைக்கும்.

**அடிப்படை உரிமைகள்**

ஒவ்வொரு குடிமகனுக்கும் மிகத்தேவையான உரிமைகளே **அடிப்படை உரிமைகள்** என்று அழைக்கப்படுகின்றன. அவை, **சம உரிமை, சுதந்திரமாகச் செயல்படும் உரிமை, சுரண்டலுக்கு எதிரான உரிமை, சுதந்திர சமய உரிமை, கலாச்சார மற்றும் கல்வி பெறும் உரிமை, சட்டத்தீர்வு பெறும் உரிமை** ஆகியவை இன்றியமையாத உரிமைகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

**வழிகாட்டு நெறிமுறை**

அரசுகள் சட்டமியற்றும்போதும், ஆட்சி செய்யும்போதும் கவனத்தில் கொள்ளவேண்டிய சில வழிகாட்டல்களை அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ளது. இவை கட்டாயமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டியவை அல்ல என்றாலும் கவனத்தில் கொள்ளப்படவேண்டியவை ஆகும்.

**வயது வந்தோர் வாக்குரிமை**

பதினெட்டு வயது பூர்த்தியான இந்தியக் குடிமகன் ஒவ்வொருவரும் வாக்களிக்கும் உரிமையைப் பெறுகிறார்கள். இந்த உரிமையை அவர்கள் பெறுவதற்குச் **சாதி, மதம், பாலினம், பொருளாதார அடுக்கு** உட்பட எதுவும் தடையாக இருக்க முடியாது.

**அடிப்படைக் கடமைகள்**

உரிமைகளைப் போலவே ஒவ்வொரு குடிமகனுக்குமான கடமைகளும் இருக்கின்றன.

- தேசியக்கொடியையும், தேசிய கீதத்தையும் மதித்து நடப்பது
- எல்லா குடிமக்களும் அரசியல் சட்டத்தை மதித்து பேணுவது
- சுதந்திரத்திற்காகப் போராடிய நமது தலைவர்களைப் பின்பற்றி நடப்பது
- நாட்டைப் பாதுகாப்பது, நாட்டுக்காகத் தேவைப்படும் போது சேவை செய்ய தயாராக இருப்பது
- சாதி, மத, மொழி, இன, எல்லை கடந்து அனைவரும் சகோதர மனப்பான்மையுடன் இருப்பது
- நமது பழம்பெருமை மிக்க பாரம்பரியத்தை காப்பது

- காடுகள், நதிகள், ஏரிகள் உள்ளிட்ட இயற்கையையும் வன விலங்குகளையும் பாதுகாப்பது
- அறிவியல், மனிதாபிமானம், சீர்திருத்த உணர்வுகளை வளர்ப்பது
- வன்முறையைத் தவிர்த்து அரசு சொத்துக்களை பாதுகாப்பது
- குழந்தைகளின் பெற்றோரோ அல்லது பாதுகாவலரோ, தமது குழந்தைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை 6-14 வயதுக்குள் தருவது

ஆகியவற்றை அரசியல் சட்டம் நமது கடமைகளாக அறிவித்துள்ளது.

அரசியலமைப்புச் சட்ட வரைவுக் குழுவில் **டாக்டர் பி. ஆர். அம்பேத்கர், என்.கோபாலசாமி. கே.எம்.முன்ஷி, சையது முகம்மது சாதுல்லா, என். மாதவ ராவ், டி.டி.கிருஷ்ணமாச்சாரி, அல்லாடி கிருஷ்ணசாமி** ஆகிய சட்ட வல்லுநர்கள் இடம்பெற்றிருந்தனர். அக்குழுவின் தலைவரான **டாக்டர் பி. ஆர். அம்பேத்கர்** நமது அரசியல் சட்டத்தை உருவாக்கிய **முதன்மைச் சிற்பியாகக்** கருதப்படுகிறார்.

நமது அரசியல் சட்டம் உருவானபோது, **395 உறுப்புகள், 22 பகுதிகள் மற்றும் 8 அட்டவணைகள்** இடம்பெற்றிருந்தன. தற்போது **448 உறுப்புகள், 25 பகுதிகள் மற்றும் 12 அட்டவணைகள்** இடம்பெற்றுள்ளன.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் 30.10.2021 வரை 105 முறை திருத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உண்மைப் பிரதிகள் (**இந்தி, ஆங்கிலம்**) **நாடாளுமன்ற நூலகத்தில் ஹீலியம் வாயு** நிரப்பப்பட்ட பேழையில் வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது.

## இந்திய அரசியலமைப்பு

10 ஆம் வகுப்பு - சமூக அறிவியல் (குடிமையியல்)

### அரசியலமைப்பு

ஒரு நாட்டின் நிர்வாகமானது எந்த அடிப்படைக் கொள்கைகளைச் சார்ந்து அமைந்துள்ளது என்பதைப் பிரதிபலிக்கும் அடிப்படைச் சட்டமே அரசியலமைப்பு என்பதாகும். அது ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு அச்சாணி ஆகும். **அரசியலமைப்பு என்ற கொள்கை முதன்முதலில் அமெரிக்க ஐக்கிய நாடுகளில் (U.S.A.) தோன்றியது.**

### அரசியலமைப்பின் அவசியம்

அனைத்து மக்களாட்சி நாடுகளும் தங்களை நிர்வகித்துக் கொள்ள ஓர் அரசியலமைப்புச் சட்டத்தைப் பெற்றுள்ளன. ஒரு நாட்டின் குடிமக்கள் வாழ விரும்பும் வகையில் சில அடிப்படைக் கொள்கைகளை அரசியலமைப்பு வகுத்துக் கொடுக்கிறது. நமது சமூகத்தின் அடிப்படைத் தன்மையை அரசியலமைப்பு நமக்குத் தெரிவிக்கிறது.

### இந்திய அரசியலமைப்பு உருவாக்கம்

**1946 ஆம் ஆண்டு, அமைச்சரவை தூதுக்குழு** திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட, இந்திய அரசியல் நிர்ணய சபையால் இந்திய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. இச்சபையில் **292 மாகாணப் பிரதிநிதிகள், 93 சுதேச அரசுகளின் நியமன உறுப்பினர்கள், மாகாண முதன்மை ஆணையர்கள் சார்பில் மூவர் (3) மற்றும் பலுச்சிஸ்தானின் சார்பில் ஒருவர் (1) என மொத்தம் 389 உறுப்பினர்கள்** இருந்தனர்.

அரசியல் நிர்ணய சபையின் **முதல் கூட்டம், 1946 ஆம் ஆண்டு டிசம்பர் 9** ஆம் நாள் நடைபெற்றது. இச்சபையின் **தற்காலிக தலைவராக மூத்த உறுப்பினர் டாக்டர் சச்சிதானந்த சின்கா** அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய அரசியலமைப்பை உருவாக்க கூட்டத்தொடர் நடந்துகொண்டிருக்கும் போதே அவர் இறந்ததைத் தொடர்ந்து, **டாக்டர்.இராஜேந்திர பிரசாத் இந்திய அரசியலமைப்பு நிர்ணய சபையின் தலைவராகவும், H.C.முகர்ஜி மற்றும் V.T கிருஷ்ணமாச்சாரி இருவரும் துணைத் தலைவர்களாகவும்** தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

இக்கூட்டத் தொடர் **11 அமர்வுகளாக 166 நாட்கள்** நடைபெற்றது. இக்கூட்டத்தின்போது **2473 திருத்தங்கள்** முன்வைக்கப்பட்டன. அவற்றுள் சில ஏற்கப்பட்டன. அரசியல் நிர்ணய சபை பல்வேறு குழுக்களின் மூலம் இந்திய அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்கும் பணியை மேற்கொண்டது. இந்திய அரசியலமைப்பு **சட்ட வரைவுக்குழுத் தலைவர் டாக்டர் B.R.அம்பேத்கர்** தலைமையின் கீழ் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது. எனவே அவர் “**இந்திய அரசியலமைப்பின் தந்தை**” என அறியப்படுகிறார்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் எழுதப்பட்ட பின்னர், பொதுமக்கள், பத்திரிக்கைகள், மாகாண சட்டமன்றங்கள் மற்றும் பலரால் விவாதிக்கப்பட்டது. இறுதியாக **முகவுரை, 22 பாகங்கள், 395 சட்டப்பிரிவுகள் மற்றும் 8 அட்டவணைகளைக்** கொண்ட இந்திய அரசியலமைப்பு, **1949 ஆம் ஆண்டு நவம்பர் 26** ஆம் நாள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. **1950 ஆம் ஆண்டு ஜனவரி 26** ஆம் நாள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

இந்த நாளே ஒவ்வொரு ஆண்டும் இந்திய குடியரசு தினமாகக் கொண்டாடப்படுகிறது.

**பிரேம் பெஹாரி நரேன் ரைஜடா** என்பவரால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் **இத்தாலிய பாணி**யில், அவரது கைப்பட எழுதப்பட்டது.

## காலனியத்துக்குப் பிந்தைய இந்தியாவின் மறுகட்டமைப்பு

12 ஆம் வகுப்பு - வரலாறு

### அரசமைப்பு உருவாக்கம்

**இந்திய அரசமைப்பின் வரைவை இந்தியர்கள் தான் உருவாக்க வேண்டும்; பிரிட்டிஷ் பாராளுமன்றம் அல்ல என்ற கோரிக்கை இந்திய தேசிய காங்கிரசின் சார்பாக 1934 இல் அதிகாரப்பூர்வமாக எழுப்பப்பட்டது.** காலனிய அரசாங்கம் வெளியிட்ட வெள்ளை அறிக்கையைக் காங்கிரஸ் புறக்கணித்தது. **இந்தியர்களே தங்களுக்கான அரசமைப்பை உருவாக்குவார்கள் என்ற அடிப்படைக் கருத்து 1922 லேயே காந்தியடிகளால் முன் வைக்கப்பட்டது.** தன்னாட்சி என்பது பிரிட்டிஷ் பாராளுமன்றத்தால் இந்தியர்களுக்கு வழங்கப்படும் கொடையாக இல்லாமல் இந்தியர்களால் சுதந்திரமாக தேர்ந்தெடுக்கப்பட்ட, இந்தியர்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் பிரதிநிதிகளிடமிருந்து உருவாக வேண்டும் என்று காந்தியடிகள் தெரிவித்திருந்தார்.

**இந்திய அரசாங்கச் சட்டம் 1935 இன் அடிப்படையில் ஆகஸ்ட் 1946 இல் மாகாண சட்டமன்றங்களுக்கான தேர்தல் நடைபெற்றது. மாகாண சட்ட மன்றங்கள் மத்திய சட்டமன்றத்தைத் தேர்ந்தெடுக்க அது அரசமைப்பு நிர்ணய சபையாக செயல்பட்டது.** 1946 இல் நடைபெற்ற மாகாண தேர்தலில் சொத்துரிமை உரியவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என இருந்தது. வயதுவந்தோர் அனைவருக்குமான வாக்குரிமை என்ற தத்துவம் நடைமுறைக்கு வந்திருக்கவில்லை. தேர்தல் முடிவுகள் முஸ்லிம் பெரும்பான்மை தொகுதிகளில் முஸ்லிம் லீக் கட்சிக்கும் மற்ற இடங்களில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சிக்கும் செல்வாக்கு இருந்ததை உணர்த்தின. முஸ்லிம் லீக் அரசமைப்பு உருவாக்கும் நடவடிக்கையிலிருந்து ஒதுங்கியிருந்து தனி நாடு கோரிக்கைக்கு அழுத்தம் கொடுக்கத் தொடங்கியது. காங்கிரஸ் அரசமைப்பு நிர்ணயசபையில் இடம்பெற்றது.

மாகாண சட்டமன்றங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அரசமைப்பு நிர்ணயசபைக்கான காங்கிரஸ் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தனர். **அரசமைப்பு நிர்ணய சபையில் காங்கிரஸ் (224 இடங்கள்)** ஆதிக்கம் செலுத்திய போதிலும் கம்யூனிஸ்டுகளும் சோஷியலிஸ்டுகளும் குறைந்த எண்ணிக்கையில் இடம்பெற்றிருந்தனர். டாக்டர். **பி.ஆர்.அம்பேத்கர், பம்பாயிலிருந்து அரசமைப்பு நிர்ணயசபைக்கு** தேர்ந்தெடுக்கப்படுமாறு பார்த்துக் கொண்ட காங்கிரஸ் அவரை **அரசமைப்பு வரைவுக் குழுவின் தலைவராகவும்** தேர்ந்தெடுத்தது. காங்கிரஸ் தலைமை தன் கட்சியின் வல்லுநர்களோடு புகழ்பெற்ற அரசமைப்பு வழக்கறிஞர்களையும் அரசமைப்பு நிர்ணயசபையில் இடம்பெறச் செய்தது.

இந்திய தேசிய காங்கிரசால் **கராச்சி கூட்டத்தில் (மார்ச் 1931)** நிறைவேற்றப்பட்ட **அடிப்படை உரிமைகள் தீர்மானத்தில்** இடம் பெற்ற **தன்னாட்சி என்பதன் பொருள் மற்றும் விடுதலைப் போராட்டத்தின் இலக்கியல் (idealism)** ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்திய அரசமைப்பு உருவாக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தில் காங்கிரஸ் மேற்கண்டவாறு அரசமைப்பு நிர்ணயசபையை உருவாக்கியது. குடிமக்களுக்கு அடிப்படை உரிமைகளையும் அரசு கொள்கைகளுக்கான வழிகாட்டு நெறிமுறைகளையும் நம்பிக்கையுடன் உறுதி செய்யும் ஓர் ஆவணமாக இந்திய அரசமைப்பு உருவாக்கப்படுவதற்கு இதுவே அடிப்படைக் காரணமாக அமைந்தது. இந்திய அரசமைப்பு இந்திய நாட்டிற்குச் சுதந்திரமான தேர்தல் ஆணையத்தையும் வயதுவந்தோர் அனைவருக்குமான வாக்குரிமையையும் உறுதி செய்தது. மேலும், இந்திய அரசமைப்பு மக்கள் பிரதிநிதிகளுக்குச் சட்டம் இயற்றுவதில் இறையாண்மையை உறுதிபடுத்திய அதே அளவுக்கு நீதித்துறையின் சுதந்திரத் தன்மையையும் உறுதி செய்தது.

அரசமைப்பு நிர்ணயசபையின் உறுப்பினர்கள் உலகின் பல்வேறு அரசமைப்புகளின் அம்சங்களைக் கற்றுக் கொள்வதிலும் அவற்றை இந்திய அரசமைப்பு உருவாக்கத்திற்கு பயன்படுத்திக் கொள்வதிலும் எவ்வித தயக்கமும் காட்டவில்லை. அதே சமயத்தில் இந்திய அரசமைப்பு உருவாக்கம் என்பது பிற உலக நாடுகளின் அரசமைப்புகளைப் பார்த்து அப்படியே எழுதிவிடும் பணி அல்ல என்பதிலும் தெளிவாக இருந்தனர்.

1946, டிசம்பர் 13 அன்று ஜவகர்லால் நேரு இந்திய அரசமைப்புக்கான **குறிக்கோள் தீர்மானத்தை** அரசமைப்பு நிர்ணய சபையில் அறிமுகப்படுத்தினார்.

அரசமைப்பு நிர்ணய சபையின் **முதல் கூட்டம் 1946 டிசம்பர் 9** இல் நடைபெற்றது. இராஜேந்திர பிரசாத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**நேரு அறிமுகப்படுத்திய குறிக்கோள் தீர்மானம் இந்திய அரசமைப்பின் உணர்வு மற்றும் உள்ளடக்கத்திற்கான மிகச் சுருக்கமான அறிமுகமாக** அமைந்தது. சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட இந்தத் தீர்மானத்தின் முக்கியத்துவத்தை இந்திய அரசமைப்பின் **முகப்புரை,**

**அடிப்படை உரிமைகள், அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள்** ஆகியவற்றைப் பார்த்துப் புரிந்து கொள்ளலாம். இந்திய அரசமைப்பு 1949 **நவம்பர்** 26 இல் அரசமைப்பு நிர்ணயசபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இந்திய அரசமைப்பு, இந்தியாவிற்கான ஒரு புதிய விடியலை உருவாக்கியதோடு இந்திய தொன்மையின் தொடர்ச்சியையும் நிறுவியது. **அடிப்படை உரிமைகள் குறிக்கோள் தீர்மானத்தின் ஐந்தாம் பிரிவிலிருந்து உருவாக்கப்பட்டன.** அதேபோல், இந்திய தேசிய காங்கிரசின் **கராச்சி கூட்டத்தில் பட்டியலிடப்பட்ட உரிமைகளும்**, இதற்கு மூலங்களாய் அமைந்தன. **இந்திய அரசமைப்பின் உணர்வு (The spirit of the Constitution) சுதந்திரப் போரின் அனுபவத்திலிருந்து** பெறப்பட்டதாகும். அதே போல், **அரசமைப்பின் சட்டமொழி குறிக்கோள் தீர்மானத்திலிருந்தும்** அதைவிட மிக முக்கியமாக **ஐக்கிய நாடுகள் சபை 1948 டிசம்பர் 10 இல் வெளியிட்ட அனைத்துலக மனித உரிமைகள் பேரறிக்கையிலிருந்தும்** எடுக்கப்பட்டது.

## இந்திய அரசமைப்பு

12 ஆம் வகுப்பு - அரசியல் அறிவியல்

### அரசமைப்பின் பொருள், பணிகள் மற்றும் முக்கியத்துவம்

காலனி ஆட்சிக்காலத்தில் உருவான நமது தேசியத்தன்மை அரசியல் விடுதலைக்காக மட்டுமல்லாமல் பல்வேறு பகுதிகளின் (பிற்காலத்தில் மாநிலங்களின்) ஒருங்கிணைப்பு, அரசமைப்புமையமாதல் (சட்டமாதல்) மற்றும் மக்களாட்சிமயம் ஆகியவற்றுக்காகவும் போராடி வந்துள்ளது.

இந்தியா ஒரு பண்பாட்டு வேற்றுமை கொண்ட நாடு என்ற போதிலும் இந்தியர்கள் அனைவரும் பல வகைகளில் ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவர் சார்ந்தும் ஒத்துழைப்புடனும் உள்ளனர். இந்த நாட்டின் மக்கள் அனைவரும் ஒருமைப்பாட்டுடன் வாழ சில குறிப்பிட்ட அடிப்படை விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் கொண்டிருப்பது அவசியமாகிறது. இத்தகைய விதிகள், ஒழுங்குமுறைகள் இல்லையென்றால் மக்களாட்சி நிலைத்திருக்காது. அந்நிலையில் மக்களின் நிலை பாதுகாப்பற்றதாக இருக்கும்.

காலனிய ஆட்சிக்காலத்தில் இந்தியா ஆங்கிலேய அரசால் பிறப்பிக்கப்பட்ட சாசனங்கள் (Charters), ஆட்சிக்குழு சட்டங்கள் (council Acts), காலனியாட்சிக்கால இந்திய அரசாங்கச் சட்டம் (Government of Indiaact) ஆகியனவற்றை அடிப்படையாகக் கொண்டே ஆளப்பட்டது. புதிதாக எழுச்சிபெற்ற இந்தியாவின் இயக்கங்களும் அதன் தலைவர்களும் ஒரு வரையறுக்கப்பட்ட எழுதப்பட்ட புதிய அரசமைப்பின் அடிப்படையில் புதிய இந்தியா உருவாக்கப்பட வேண்டும் என்பதை விரும்பினர். மைய (மத்திய) சட்டமன்றம் அரசமைப்பு நிர்ணய சபையாக மாற்றப்பட்டது. மாநிலங்களின் (அரசுகளின்) ஒன்றியமாக, பல பிரிவுகளுக்கும் ஒருமைப்பாட்டினையும் ஒருங்கிணைப்பையும் வழங்கும் கூட்டாட்சியை உருவாக்கும் வகையில் புதிய அரசமைப்பை முன்மொழிய வேண்டியிருந்தது.

அரசமைப்பு 'நாட்டின் அடிப்படைச் சட்டம்' என்று அழைக்கப்படுகிறது.

ஒரு அரசமைப்பின் மிக முக்கியச் செயல்பாடு என்பது அந்த அரசின் குடிமக்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கக்கூடிய அடிப்படை விதிகளை வழங்குவதுதான். ஒரு அரசு அமைக்கப்பட்டு, அது ஆட்சி செய்வதற்குத் தேவையான விதிகளைக் கொண்டதே அரசமைப்பு ஆகும். ஒரு அரசின் பல பாகங்களுக்குத் தேவையான ஒதுக்கீடுகளை அரசமைப்பு வரையறுக்கிறது. இந்திய பன்மைத்துவத்துக்கு மாநிலங்களின் ஒன்றியமே தேவையானதாகும். இந்திய விடுதலைப் போராட்ட இயக்கங்களும் ஒரு மக்களாட்சி வடிவிலான அரசினையே விரும்பின. இதன்படி நாடாளுமன்றமே நமது அரசின் கொள்கைகளையும் சட்டங்களையும் முடிவு செய்கிறது.

ஒரு சமூகத்தின் விருப்பங்களை நிறைவேற்றவும் ஒரு சமுதாயத்துக்கான வரையறைகளை உருவாக்கவும் அரசாங்கத்திற்கு அரசமைப்பு அதிகாரம் வழங்குகிறது. **இந்திய அரசமைப்பின் நான்காவது பாகம் இந்திய சமூகத்தில் பரவலாக நிலவும் பல சிக்கல்களை எதிர்கொள்ளும் சட்டங்களை அரசு உருவாக்கும் வகையில் விதிகளைக் கொண்டுள்ளது.** ஒரு நாட்டின் மக்களின் அடிப்படை அடையாளங்களை அரசமைப்பு வெளிப்படுத்துகிறது. தனது குடிமக்களால் ஒருபோதும் மீறப்படாத சில குறிப்பிட்ட அடிப்படைச் சட்டங்களை ஒரு அரசமைப்பு முன்மொழிகிறது. ஒரு நாட்டின் அனைத்து குடிமக்களையும் ஒரு அரசமைப்பு பாதுகாக்கிறது. ஒரு நாட்டின் மத்திய அரசுக்கும் அந்நாட்டின் மாநில அரசுகளுக்கும் இடையேயான உறவினையும், பல்வேறு மாநிலங்களுக்கிடையேயான உறவினையும் கொண்ட ஒரு சட்டகத்தினையும் அது உருவாக்குகிறது. உலகின் அரசமைப்புகளில் பெரும்பான்மையானவை எழுதப்பட்ட ஆவணங்களாகக் காணப்படுகின்றன; அவை பல பிரிவுகள், பட்டியல்களைக் கொண்டுள்ளன. இங்கிலாந்து அரசில் காணப்படுவது போன்று அரசமைப்பை ஒரே ஆவணமாகக் கொண்டிராத சில அரசுகளும் உள்ளன. இங்கிலாந்து அரசானது ஏராளமான வழக்கங்கள், உடன்பாடுகள் மற்றும்

வரலாற்று முன்னுதாரணங்கள் ஆகியனவற்றின் தொகுப்பாக பல அங்கங்களைக் கொண்ட அரசமைப்பினைக் கொண்டுள்ளது.

**மதச்சார்பு அரசு**

மதச்சார்பின்மை கோட்பாட்டினைப் பின்பற்றாத அரசு மதச்சார்பு அரசு எனப்படும். மத சார்பு அரசு என்பது ஒரு மதத்தினை அரசு மதமாகக் கொண்டிருக்கும். அந்த அரசின் உயர் பதவிகள் அனைத்தும் அரசு மதத்தை பின்பற்றுவோருக்கு மட்டும் ஒதுக்கப்பட்டிருக்கும். மதச்சார்பு அரசு உதாரணங்கள் - பாகிஸ்தான், வாடிகன் நகரம் போன்றவை ஆகும்.

**உருவாக்கம்**

ஓர் அரசமைப்பு எவ்வாறு நடைமுறைக்கு வந்தது, அதை யார் உருவாக்கியது, அதன் அதிகார அமைப்புகள் என்ன என்பன போன்ற தகவல்கள் 'அரசமைப்பு உருவாக்கம்' என்ற பெயரால் குறிக்கப்படுகிறது. உதாரணமாக, அமெரிக்க அரசமைப்பானது அங்கு தேசிய இயக்கம் வெற்றியடைந்ததைத் தொடர்ந்து உருவாக்கப்பட்டது. இந்திய அரசமைப்பானது மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட அரசியல் நிர்ணய சபையால் உருவாக்கப்பட்ட சட்டப்பூர்வமான அரசமைப்பாகும். விடுதலையின் போது நாட்டில் இருந்த மக்கள் பிரிவுகளில் பெரும்பான்மையோரின் ஒருமித்த கருத்தை இந்திய அரசமைப்பு பிரதிபலிக்கிறது. அரசமைப்பை பொதுவாக்கெடுப்புக்கு விட்டு அங்கீகாரம் பெறும் நிகழ்வுகள் சில நாடுகளில் உள்ளது.

**பொதுவாக்கெடுப்பு**

சட்டமன்றங்களில் மக்கள் பிரதிநிதிகளால் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்படுவதற்கு மாறாக ஒன்று அல்லது பல கேள்விகளின் தொகுப்பின் மீது வாக்காளர்களின் ஒப்புதல்பெற நேரடி வாக்கெடுப்பு நடத்துவது பொதுவாக்கெடுப்பு ஆகும். பொதுவாக்கெடுப்பு முறை ஒரு சட்டப்பூர்வ ஏற்பாடாகவும், தனிநபருக்கும், பொதுமக்களுக்கும் அளிக்கும் அங்கீகாரமாகவும், ஒப்புதலாகவும் பார்க்கப்படுகிறது.

**இந்திய அரசமைப்பு திருத்தங்களில் ஒன்றிற்குக்கூட இதுவரை பொதுவாக்கெடுப்பு விடப்பட்டதில்லை. இந்திய மக்களாட்சி முறையில் இது ஒரு பின்னடைவாகும்** இதன் பொருத்தப்பாட்டினை அறிய சுவிட்சர்லாந்து நாட்டின் பொது வாக்கெடுப்புமுறையை அறிந்துகொள்வது பயனுள்ளதாக அமையும்.

**ஓர் அரசமைப்பின் அம்சங்கள்**

ஒரு சிறந்த அரசமைப்பு என்பது சமூகத்தின் அனைத்து பிரிவுகளின் எதிர்பார்ப்புகளுக்கும் இடமளிப்பதாக இருக்க வேண்டும். மதம், சாதி, மொழி அடிப்படையில் பாகுபாடு கொண்ட அரசமைப்புகள் நாட்டின் அனைவராலும் ஏற்கப்படாமல் போகலாம். அரசமைப்பின் அடிப்படைச் சட்டவிதிகளே அதன் தன்மையை வெளிப்படுத்துகின்றன. தன் குடிமக்கள் அனைவருக்கும் சுதந்திரத்தினையும், சமத்துவத்தினையும் பாதுகாக்கும் எந்த அரசமைப்பும் வெற்றிகரமானதாகும்.

**இந்தியாவில் மதச்சார்பின்மை**

இந்திய அரசமைப்பின் 42 **வது திருத்தச்சட்டம்**, அரசமைப்பின் முகப்புரையில் கூறப்பட்டுள்ள '**இறையாண்மை கொண்ட குடியரசு**' என்பதை '**இறையாண்மை, சமதர்மம், மதச்சார்பற்ற மக்களாட்சி குடியரசு**' என்றும் '**நாட்டின் ஒற்றுமை**' என்ற சொற்றொடரை '**நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு**' என்றும் **முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி** 1976 இல் **தேசிய அவசரநிலைக் காலத்தில்** இந்த 42-**வது திருத்தத்தைக்** கொண்டு வந்தார்.

ஒரு தனிநபர் அல்லது ஒற்றை நிறுவனத்திடம் அனைத்து அதிகாரங்களும் குவிக்கப்பட்டால் தவறாகப் பயன்படுத்தப்பட வழியேற்படும் என்பதால் ஒரு சிறந்த அரசமைப்பில் அதிகாரங்கள் தனி நபரிடமோ ஒற்றை நிறுவனத்திடமோ குவிக்கப்படுவதில்லை. இதனையொட்டி பல அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ளும் வகையில் பிரித்து வழங்கப்பட்டு சமநிலைப்படுத்தும் முறை பின்பற்றப்படுகிறது.

**இந்திய அரசமைப்பு அதிகாரங்களை சட்டமன்றம், நிர்வாகம், நீதித்துறை போன்ற நிறுவனங்கள் இடையே கிடைமட்டமாக பகிர்ந்து வழங்குகிறது.** இந்திய அரசமைப்பு அதிக இறுக்கமான தன்மையைக் கொண்டதில்லை; அதிக நெகிழ்வுத் தன்மையும் கொண்டதில்லை; அதன் மாறாத அடிப்படை அமைப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள் மூலம் இது வெளிப்படுகிறது. சிறப்பாக எழுதி வடிவமைக்கப்பட்ட ஒரு அரசமைப்பு என்பது அதன் உட்கருவைத் தக்கவைத்துக்கொண்டு மாறும் சூழல்களுக்கு ஏற்ப மாற்றிக்கொள்ளத்தக்கதாகும். நமது அரசமைப்பு நெருக்கடி மிக்க தருணங்களிலும் செயல்படுவதை அரசமைப்பை உருவாக்கிய மேதைகள் உறுதிசெய்துள்ளனர்.

**அரசமைப்பின் தயாரிப்புப் பணிகள்**

அரசமைப்பு நிர்ணயசபை உறுப்பினர்கள் அரசமைப்பினை எழுதினர். அரசமைப்பு நிர்ணயச் சபையின் **முதல் கூட்டம்** 9 **டிசம்பர்** 1946 அன்று கூடியது. பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின்னர் மீதமுள்ள இந்தியாவுக்கான அரசமைப்பு நிர்ணயச் சபை 14 **ஆகஸ்ட்** 1947 அன்று மீண்டும் கூடியது. அன்றைய **மாகாணச் சட்டமன்றங்களின் உறுப்பினர்களே அரசமைப்பு நிர்ணயச் சபை உறுப்பினர்களை மறைமுக வாக்கெடுப்பின்** மூலம் தேர்ந்தெடுத்தனர்.